सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

# வரவு - செலவுத் திட்ட உரை

## 2019 - 2020

**திரு வே. நாராயணசாமி**

மாண்புமிகு முதலமைச்சர்



28 ஆகஸ்ட், 2019

# வரவு – செலவுத் திட்ட உரை

2019 - 2020

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (குறள்-544)

குடிமக்களை அன்போடு அரவணைத்துச் செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்கள் வாழ்வர்.

*மாண்புகெழுமிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே !*

**வணக்கம் !**

**நா**ன் நடப்பு 2019-20ஆம் ஆண்டிற்கான எனது அரசின் வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையில் சமர்ப்பிக்க உள்ளேன். இது இந்த அவையில் நான் தொடர்ந்து சமர்ப்பிக்கும் நான்காவது வரவு-செலவுத் திட்ட அறிக்கையாகும்.

**2.** பெருமைவாய்ந்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நடப்பு நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்கக் குறிப்பு அறிக்கை ஆகியவற்றின் பிரதிகள் வழங்கப்பட உள்ளன.

**3.** நமது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை உங்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் வளமிக்க முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் பொறுப்புணர்வுடன், இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத்தொடரைத் துவக்கியுள்ளோம்.

4. சமீபத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் மக்கள் முழுமனதுடன், நம்மாநிலம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளை கருத்தில் கொண்டு மிகவும் தகுதிவாய்ந்த மக்களவை உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தனர். இதற்காகப் புதுச்சேரி மக்களுக்கு எமது உளமார்ந்த நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

5. இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களின் நல்வாழ்த்துக்களோடும், எங்கள் அருமை இளம் தலைவர் திருமிகு ராகுல் காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதுபெரும் தலைவர் முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசிகளோடும், தலைவர் திருமிகு மு.க. ஸ்டாலின் மற்றும் ஏனைய கூட்டணிக் கட்சித் தலைவர்களின் பேராதரவோடும் நம் மாநில மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

6. இந்த நிதி ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் முன், கடந்த 15-6-2019 அன்று புது தில்லியில் நடந்த நிதி ஆயோக் (NITI AYOG) கூட்டத்தில், இவ்வாட்சிப்பரப்பு எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்சனைகள் குறித்து நான் எடுத்துரைத்தேன். மேலும், நம் மாநிலத்தின் நிதி ஆதாரங்களை

மேம்படுத்த, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பின்வரும் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு காணுமாறு அக்கூட்டத்தில் நான் வலியுறுத்தியதை மாண்புமிகு உறுப்பினர்களுடன் இங்கு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

(i) புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குத் தனி மாநில அந்தஸ்து வழங்குதல்;

(ii) மத்திய அரசின் நிதி உதவி கூடுதலாகக் கிடைக்க ஏதுவாக, இவ்வாட்சிப்பரப்பை மத்திய நிதிக்குழுவின் வரம்புக்குள் கொண்டு வருதல்;

(iii) 2007ஆம் ஆண்டு தனிப் பொதுக்கணக்குத் தொடங்கப்பட்ட அன்று, புதுச்சேரி அரசு, மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடன் பாக்கி ₹ 2,177 கோடியைத் தள்ளுபடி செய்தல்;

(iv) மத்திய அரசு புதுச்சேரி அரசுக்குத் தரவேண்டிய இடைவெளி மானியம் (Gap grant), மின்சாரக் கட்டணத்தை மாற்றி அமைத்ததின் விளைவாக நேரிட்ட இழப்பீடு, 2012-13ஆம் ஆண்டுக்கான “தானே” (Thane) புயல் நிவாரணம் மற்றும் 2015-16ஆம் ஆண்டுக்கான மழை நிவாரணம் ஆகியவற்றை உரிய விதத்தில் அளித்தல்;

(v) டெல்லி யூனியன் பிரதேசத்தில் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின் ஓய்வூதியச் செலவை மத்திய அரசு ஏற்பதுபோல், புதுச்சேரி மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதியச் செலவையும் மத்திய அரசே ஏற்றல்;

(vi) புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு தற்போது மத்திய அரசின் திட்டங்களுக்கு (Centrally Sponsored Scheme) வழங்கப்படும் நிதியின் விகிதாசாரமான 60:40 என்பதற்குப் பதிலாக மற்ற யூனியன் பிரதேசத்திற்கு வழங்கப்படும் நிதி விகிதாசாரமான 90:10ஐப் போல புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் நிதி வழங்குதல்;

(vii) புதுச்சேரிக்கு ஆண்டுதோறும் அளிக்கப்படும் மத்திய அரசின் நிதி உதவியை (Central Assistance) வருடத்திற்கு குறைந்தபட்சம் 10 விழுக்காடு உயர்த்தித் தருதல்.

**7.** நானும், என்னுடைய அமைச்சர் பெருமக்களும் மேற்கூறிய நமது தொடர் கோரிக்கைகளைப் பல கட்டங்களில் மத்திய அரசிடம் முன்னரே தொடர்ந்து வலியுறுத்தியுள்ளோம். எனவே, மத்திய அரசு நமது மேற்கண்ட கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்து நல்ல முடிவுகளை மக்கள் விரும்புமாறு எடுக்கும் என நான் நம்புகிறேன்.

**8.** நான் இந்த நிதி நிலை அறிக்கையை இறுதி செய்யும் முன் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள், பல்வேறு அமைப்புகள் மற்றும் தொடர்புடைய துறை அதிகாரிகளிடம் விரிவான பலகட்ட ஆலோசனைகள் செய்தேன். அவர்களின் மேலான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து அதன் அடிப்படையில் 2019-20ஆம் ஆண்டுக்கான இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தற்போது செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாதவண்ணம், பொதுத் துறை மற்றும் தன்னாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நிலுவையிலுள்ள ஊதியங்கள் மற்றும் பணிக்கொடை உள்ளிட்டவற்றை வழங்கிட முடிந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளேன். சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரும் விரும்புமாறு, இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திடும் என உறுதியாக நம்புகிறேன்.

**9.** 2019-20ஆம் ஆண்டுக்கான மாநிலத் திட்டக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 8,425 கோடி ஆகும். இதில், மாநில நிதி ஆதாரங்கள் ₹ 5,435 கோடியாகவும் (65 விழுக்காடு), மத்திய நிதி உதவித் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி (Central Assistance) ₹ 1,890 கோடியாகவும் (22 விழுக்காடு) உள்ளன.

மீதமுள்ள ₹ 1,100 கோடியை (13 விழுக்காடு) வெளிச்சந்தைக் கடன் (Market borrowings) மற்றும் மத்திய நிதி நிறுவனங்களின் மூலம் திரட்ட முடிவு செய்துள்ளோம்.

**10.** அரசின் நிதி ஆதாரங்களின் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட முக்கிய செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். ₹ 8,425 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 2019-20ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 1,896 கோடி சம்பளங்களுக்கும் (22 விழுக்காடு), ₹ 930 கோடி ஓய்வூதியங்களுக்கும் (11 விழுக்காடு), ₹ 1,550 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (18 விழுக்காடு), ₹ 1,250 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (15 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கிய செலவினங்களான முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு ₹ 573 கோடியும் (7 விழுக்காடு), பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 889 கோடியும் (11 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.** 2009-10ஆம் நிதி ஆண்டில் பெறப்பட்ட வெளிச்சந்தைக் கடன் தொகை ₹ 500 கோடியை எதிர்வரும் டிசம்பர் 2019இல் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது என்பதை

மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன். இது நமக்குத் தவிர்க்கமுடியாத ஒரு பெரும் நிதிச் சுமையாகும். இருப்பினும், இவ்வரசு கடந்த வருடங்களில் பெற்ற கடனை முறையாக திருப்பிச் செலுத்தியவாறு இந்த நிதி ஆண்டிலும் உரிய காலத்தில் முதிர்ச்சியான கடன் தொகையைக் குறித்த காலத்திற்குள் முறையாகத் திருப்பிச் செலுத்தும்.

**12.** கடந்த 2018-19ஆம் நிதியாண்டில் நமது செலவினம் ₹ 7,416.19 கோடியாகும், இது 2018-19இன் திருத்திய மதிப்பீட்டின்படி 94.10 விழுக்காடு ஆகும். மத்திய அரசுத் திட்டங்களின் (CSS)கீழ் வழங்கப்படும் நிதி மத்திய அரசிடம் இருந்து கடந்த நிதி ஆண்டின் இறுதியில், அதாவது பெரும்பாலும் மார்ச் மாதத்தில் பெறப்பட்டதால், 65.45 விழுக்காடு மட்டுமே நம்மால் செலவு செய்ய முடிந்தது. இருப்பினும், மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் பெற்ற நிதியில் கடந்த நிதி ஆண்டில் செலவு செய்யாத மீதமுள்ள தொகையை இவ்வாண்டு நிதியுடன் சேர்த்துக் கொள்ளும் முறை நடைமுறையில் இருப்பதால், நாம் கடந்த ஆண்டு இறுதியில் பெறப்பட்ட மீதமுள்ள தொகையை இவ்வாண்டு முழுமையாகச் செலவு செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

**13.** புதுச்சேரி அரசு நிதி மேலாண்மையைத் திறம்படக் கையாண்டு வருகிறது என்று மத்திய அரசே பாராட்டியுள்ளதை நான் மதிப்புமிகுந்த இந்த அவையில் பெருமையுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். எனது அரசு அனைத்து நிதிநிலைக் குறியீடுகளையும் அதன் வரையறைக்குள் தொடர்ந்து பராமரித்து வருவதால் இவ்வாட்சிப்பரப்பு நிதி நிலைமையில் சீரான தன்மையைப் பெற்றுள்ளது. இந்திய அளவில் உள்நாட்டு மொத்த வருவாய் (GDP) வளர்ச்சி விகிதம் 6.7 விழுக்காடாக மட்டுமே உள்ள நிலையில் நமது புதுச்சேரி மாநிலத்தின் உள்நாட்டு மொத்த வருவாய் (GSDP) 11 விழுக்காடு என்ற அளவில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளது என்பது நமது மாநிலம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதை எடுத்துக் காட்டுகிறது. இதற்காக நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் அனைவரின் ஆதரவுடன் புதுச்சேரியின் வளர்ச்சியை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்ல எங்கள் அரசு தொடர்ந்து பாடுபடும். இந்த முன்னுரையுடன், துறைவாரியான மானியக் கோரிக்கையை பின்வருமாறு நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்**

**14.** சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (குறள்-1031)

அதாவது, உலகமானது ஏரின் பின்னேதான் இயங்கும். அதனால் எவ்வளவு துன்பம் வரினும் உழவுத் தொழிலே தலையாயது என்பது திருவள்ளுவரின் வாக்கு. நம் மாநிலத்தில் தற்போது

உள்ள 50 விழுக்காடு மக்கள் வேளாண் தொழிலைச் சார்ந்து இருக்கும் நிலையில், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் (GSDP) இதன் பங்களிப்பு 7 விழுக்காடாக உள்ளது. எனவே, விவசாயத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், எனது அரசு விவசாய முதலீட்டை அதிகரிக்கவும் உறுதிபூண்டுள்ளது. விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் வழங்குவது, வேளாண் சார் தொழில்கள், சந்தை வசதி, தொழில்நுட்பம் மற்றும் விவசாயக் கடன் போன்ற நடவடிக்கைகள் மூலம் விவசாயத்தை ஊக்குவித்து வருகிறது.

**15.** புதிய பல்வேறு நேரடி மானியத் திட்டங்களை விவசாயிகள் நலனுக்காக அறிவிப்பதில் நான் பெருமகிழச்சி அடைகிறேன். வேளாண் பயிர் உற்பத்தித் திட்டத்தின்கீழ், நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த இடுபொருள் மற்றும் சாகுபடிக்குப் பிந்தைய பொருளீட்டு மானியங்களுக்கு மாற்றாக, உற்பத்திச் செலவினங்களுக்கான மானியமாக குறுவை / சொர்ணவாரி பருவத்திற்கு ஏக்கருக்கு ₹ 5,000 வீதமும் மற்றும் சம்பா / தாளடி பருவத்திற்கு ஏக்கருக்கு ₹ 5,000 வீதமும் நெல் பயிரிடக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ₹ 10,000 வீதம் முன்பு இருந்ததைவிட இருமடங்கு உயர்த்தி மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ₹ 16.15 கோடி கூடுதல் செலவாகும்.

**16.** நவரைப் பருவத்தில் நெற்பயிருக்கு மாற்றாக சிறுதானிய வகைப்பயிர்கள் மற்றும் பயறு சாகுபடியை ஊக்குவிக்க முடிவு செய்துள்ளேன். இதற்கான செலவினங்களுக்கான மானியமாக சிறுதானியப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 5,000 வீதமும், பயறுவகைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ₹ 2,000 வீதமும் மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ₹ 76.72 இலட்சம் கூடுதலாகச் செலவாகும்.

**17.** இதேபோல், கரும்பு மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 10,000 வீதம் வழங்கப்படும். இதற்காக ₹ 4.18 கோடி கூடுதலாகச் செலவாகும். காய்கறி, வாழை மற்றும் இதர பழங்கள் மற்றும் தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மத்திய அரசுத் திட்டத்தில் வழங்கப்படும் சாகுபடிக்குப் பிந்தைய பொருளீட்டு மானியத்துடன், கூடுதலாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 5,000 வீதம் மொத்த மானியத் தொகை ஏக்கருக்கு ₹ 10,000க்கு குறையாமல் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ₹ 1.26 கோடி செலவிடப்படும்.

**18.** மணிலா மற்றும் எள் போன்ற எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் செலவினங்களுக்கான மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ₹ 2,000 வீதம் வழங்கப்படும். தென்னை சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு மானியமாக

ஆண்டுக்கு ₹ 3,000 வீதம் வழங்கப்படும். இதற்காக ₹ 1.50 கோடி செலவாகும். ஏற்கனவே அறிவித்தபடி, தீவனப்பயிர் உற்பத்திக்கு வழங்கப்படும் அறுவடைக்குப் பிந்தைய மானியம், ஏக்கருக்கு ₹ 5,000லிருந்து ₹ 8,000ஆக இந்த ஆண்டு உயர்த்தி வழங்கப்படும். இதற்குத் தேவையான நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**19.** துல்லியப் பண்ணையத் திட்டத்தின் மூலம் (Precision Farming) நீர் மற்றும் உரப் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்தி தரமான மகசூல் பெற்றிட விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் உரப்பாசனக் கருவிகளைப் பொருத்தவும் தேவையான தொழில்நுட்ப இடுபொருட்களை உபயோகப்படுத்தவும் நூறு விழுக்காடு மானியமாக ஹெக்டேருக்கு ₹ 1.75 இலட்சம் என்ற அளவில் வழங்கி முதற்கட்டமாக இந்த நிதி ஆண்டில் 100 ஹெக்டேர் (240 ஏக்கர்) விளைநிலங்கள் துல்லியப் பண்ணையத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும்.

**20.** உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல் என்ற புதிய திட்டத்தின் மூலம், இந்த வருடம் பத்து தகுதிவாய்ந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு, ஒரு முறை நிதி உதவியாக (One Time Assistance) தலா ₹ 10 இலட்சம் வழங்கப்படும். உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் நிலையான சுய நிர்வாக அமைப்புகளாகச் செயல்படவும், உழவர்களுக்கான சேவைகளைத் திறம்பட வழங்கவும் இத்திட்டம் உதவும். இந்தத்

திட்டத்தின் வாயிலாக அளிக்கப்படும் நிதி ஆதாரமானது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளுக்குப் பேருதவியாக அமையும்.

**21.** வேளாண் உயர் தொழில்நுட்பத்தினை விவசாயிகள் மத்தியில் பரவலாக்க வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு வளாகம் மற்றும் வளாகத்துக்கு வெளியே (Off campus) விவசாயிகளை அழைத்துச் சென்று தொழில்நுட்பப் பயிற்சி அளிக்க சிறப்புக் கவனம் செலுத்தப்படும். பல்வேறு மத்திய ஆராய்ச்சி நிறுவனங்களான: (i) இந்தியத் தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம், கர்நாடகா; (ii) இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம், கேரளா; (iii) தேசிய தாவர சுகாதார மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத்; (iv) வன மரபியல் மற்றும் மரவளர்ச்சி நிறுவனம், கோயம்புத்தூர்; (v) மத்திய உணவுத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், கர்நாடகா மற்றும் (vi) மண்டல இயற்கை வேளாண்மை மையம், கர்நாடகா உள்ளிட்ட பல மத்திய தொழில்நுட்ப வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு மகளிர் உள்ளிட்ட 200 விவசாயிகளை அழைத்துச்சென்று அவர்களுக்குப் புதிய வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்க இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக்குப் பின்னர் விவசாயிகளுக்கு விவசாயம் செய்யவும் மற்றும் வேளாண் தொழில் துவங்கவும் ₹ 50,000 முதல் ₹ 5,00,000 வரை வங்கிக் கடன் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**22.** எனது அரசு விவசாய நிலங்களுக்கான நீர் மேலாண்மையில் அதிகக் கவனம் செலுத்திவருகிறது. அதன் ஒரு அங்கமாக புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் நிலங்களில் நீர் ஆதாரத்தை மேம்படுத்தும் வண்ணம் ¼ ஏக்கர் நிலப்பரப்பில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட 100 விழுக்காடு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**23.** நீர் மேலாண்மை குறித்து விவாதிக்க சிறப்பு சட்டமன்றக் கூட்டம் சமீபத்தில் கூட்டப்பட்ட நிலையில், இதன் தொடர்ச்சியாக மழைநீர் சேகரிப்பு, ஏரி மற்றும் குளங்களைத் தூர்வாருதல், பாரம்பரிய மற்றும் இதர நீர்நிலைகளைச் சீரமைத்தல் போன்ற நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன. காரைக்கால் மாவட்டத்தில் தனியார் பங்களிப்புடன் இதுவரை 84 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 29 குளங்களைப் புனரமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புதுச்சேரிப் பிராந்தியத்திலும் 32 ஏரிகள் மற்றும் குளங்களைத் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (DRDA) மூலம் நீர்நிலைகளைச் சீரமைக்கும் பணிக்காக ₹ 50 இலட்சம் இவ்வாண்டு செலவிடப்படும்.

**24.** இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்குத் தேவையான பஞ்சகவ்யா, அமிர்தகரைசல், ஐந்து இலைச்சாறு போன்ற இடுபொருட்களைத்

தங்களது பண்ணையிலேயே தயாரிக்கத் தேவையான உபகரணங்கள் 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். விவசாய விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல் மூலம் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப உபகரணங்களான நெல் உமியைப் பிரித்தெடுக்கும் கருவி, பயறு மற்றும் சிறு, குறு தானியங்களைப் பிரித்தெடுக்கும் கருவி, மரச்செக்கு போன்ற இயந்திரங்களை விவசாயிகள் வாங்கிட 50 விழுக்காடு மானியம் ₹ 20,000க்கு மிகாமல் வழங்கப்படும்.

**25.** நம் மாநிலத்தில் பசுந்தீவனங்களின் தேவை அதிகம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதைக் கருத்தில்கொண்டு வருடம் முழுவதற்குமான பசுந்தீவனத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் விவசாயிகளுக்கு “காற்றுப் புகா குழிபதன” முறையில் பேழைகள் அமைக்க அல்லது காற்றுப் புகா பைகள் வாங்க 100 விழுக்காடு மானியத்துடன் கூடிய ஒரு புதிய திட்டம் சோதனை அடிப்படையில் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும். இதற்குத் தேவையான நிதி உதவி மத்திய அரசின் RKVY திட்டத்தின்கீழ் பெறப்படும்.

**26.** கிராம மற்றும் நகரப் பகுதிகளில் வீட்டின் புறப்பகுதி மற்றும் மாடிகளில் காய்கறிக் கழிவுகள் மற்றும் இதர கழிவுகளைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கத் தேவையான இடுபொருட்கள்,

75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். கிராமப்புறங்களில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் முழு நேர விவசாயிகள் மற்றும் விவசாய கூலித் தொழிலாளர்களின் நலனுக்காக ஒரு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், நம் மாநிலத்திற்கான வேளாண் பொருட்கள் ஏற்றுமதிக் கொள்கை விரைவில் வெளியிடப்படும்.

**27.** எனது அரசு பாசிக் (PASIC) ஊழியர்களின் தேவைகளை மனிதநேயத்தோடு கவனத்தில் கொண்டு அவர்களின் இன்னல்களைக் குறைக்கும் வண்ணம், தொழிலாளர் ஊதியம் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) நிலுவைக்காக ₹ 8 கோடியை 2019-20ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கியுள்ளது. பாசிக் நிறுவனம் புதிய நிதி ஆதாரங்களைத் திரட்டவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**28.** வங்கிகளிடம் இருந்து, விவசாயக் கடன், “முத்ரா” கடன் போன்ற கடன்களை விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக எனது அரசு வேளாண் உதவியாளர்களை (Agri Correspondent) நியமிக்க உத்தேசித்துள்ளது. கால்நடை மற்றும் மீன்கள் வளர்ப்போரும் இந்த உதவியாளர்களின் சேவையைப் பெறலாம். மேலும், வங்கிகளிடமிருந்து கடன் சேவைகளை எளிதில் பெறுவதற்கு ஏதுவாக, நிர்வாக நடைமுறைகளை எளிமைப்படுத்த வங்கிகள் ஒப்புக்கொண்டுள்ளன. எளிமைப்படுத்தப்பட்ட நிர்வாக நடைமுறைகள் விரைவில் அமுலுக்கு வரும்.

**கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்**

**29.** எனது அரசு, இவ்வாட்சிப்பரப்பில் கால்நடை மற்றும் கோழிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. கால்நடைகளின் நலன், பாதுகாப்பு, உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் அதன்மூலம் தொழில் முனைவோரை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சிறந்த மலபார் ஆடுகளின் விந்துகளை கால்நடைக் கிளை நிலையங்கள் மூலம் செயற்கைக் கருவூட்டல் செய்து தற்போதுள்ள உள்ளூர் ஆடுகளை மேம்படுத்தி உற்பத்தியைப் பெருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி – கரியமாணிக்கம் மற்றும் காரைக்கால் – கோட்டுச்சேரி பகுதியில் உள்ள அரசு கோழிப்பண்ணைகள் சீரமைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படும்.

**30.** எனது அரசு, சிறந்த மரபணு கொண்ட கலப்பினக் கிடேரிக் கன்றுகளை உருவாக்கத் தேவையான உறை விந்தினை (Sex sorted semen) தேசிய பால்வள மேம்பாட்டு நிறுவனம் (NDDB) மூலமாக நடப்பு ஆண்டில் பெறுவதற்கு உத்தேசித்துள்ளது. மேலும், கலப்பின ஜெர்சி மற்றும் சாஹிவால் கன்றுகள் அறிமுகப்படுத்தப்படும். புதுச்சேரி “வெண்மைப்

புரட்சியின்" ஒரு பகுதியாக, பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடையும் பொருட்டு வரும் மூன்று ஆண்டுகளில், 6,000 கறவை மாடுகள் புதியதாக வாங்க நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பால் உற்பத்தியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (DEDS) கீழ், அட்டவணைப் பிரிவினருக்கு 33 விழுக்காடு மானியமும், பிற பிரிவினருக்கு 25 விழுக்காடு மானியமும் கறவை மாடுகள் வாங்க அளிக்கப்படும். இத்துடன் நமது புதுச்சேரி அரசின் மானியமாக 10 விழுக்காடு கறவை மாடுகள் வாங்க அளிக்கப்படும். மீதமுள்ள தொகை வங்கிகள் மூலமாக கடனாகப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப் பொருளாதாரம் உயரும் வேளையில் கிராமப்புற மகளிர் மேம்பாடும் உறுதி செய்யப்படும். கால்நடை வளர்ப்போர் பகுதிக்கே இரு சக்கர வாகனங்களில் சென்று சேவை அளிக்கும் பொருட்டு, கால்நடை மருந்தகங்களுக்கு 17 நடமாடும் "திரவ நைட்ரஜன் கொள்கலன்" (Liquid Nitrogen Container) கொள்முதல் செய்யப்படும்.

**31.** 1994ஆம் ஆண்டு துவங்கப்பட்ட ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (RIVER) இந்த ஆண்டு வெள்ளி விழா கொண்டாடவிருக்கிறது. மேலும், கால்நடை மருத்துவ, இளங்கலைப் பட்டப்படிப்பிற்கு மிகவும் விரும்பப்படும் கல்லூரியாகவும் இது திகழ்கிறது. வெள்ளாடு / செம்மறி ஆடு மற்றும் கோழிப்பண்ணை துவங்க

ஆர்வமுள்ளவர்களுக்கு 2 முதல் 7 நாட்களுக்குக் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை மற்றும் ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (RIVER) உள்ள திறமையான அலுவலர்களைக் கொண்டு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். "தொழில் முனைதலை உருவாக்குதல் மற்றும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்" (EDEG) என்ற மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் / நபார்டு வங்கி மூலம் கடனுதவி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**32.** புதுச்சேரிப் பிரதேசத்தில் கறவை மாடுகளின் பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, சமீபத்தில் அறிவிக்கப்பட்டுள்ள புதுச்சேரி வெண்மைப் புரட்சித் திட்டத்தின்கீழ் (Puducherry White Revolution), கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பாண்லே மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறையுடன் இணைந்து கறவை மாடுகளுக்குத் தாது உப்புக் கலவை (Mineral Mixture) வழங்கும் புதிய திட்டத்தை சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்த உள்ளோம். முதலில், இத்திட்டம் காரைக்கால், ஏனாம் மற்றும் புதுச்சேரியில் (பூரணாங்குப்பம், கொம்பாக்கம், பாகூர் மற்றும் கோர்க்காடு ஆகிய நான்கு கிராமங்களில்) நடைமுறைப்படுத்தப்படும். பாண்லே நிறுவனத்திற்குப்

பால் விநியோகம் செய்யும் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த தாது உப்புக் கலவை வழங்கப்படும். தகுந்த கள ஆய்வுக்குப் பின்னர் இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

**33.** ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (RIVER) மத்திய அரசின் இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுமத்துடன் (ICAR) பின்வரும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளது.

(i) பெங்களூருவில் உள்ள தேசிய வருடாந்திர ஊட்டச்சத்து மற்றும் உடலியல் நிறுவனத்துடன் பருவநிலை மாற்றத்தால் கால்நடைப் பெருக்கத்தில் ஏற்படுகின்ற தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக முதல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. புதுச்சேரிப் பிரதேசத்தில் நிலவும் காலநிலையில் வாழக்கூடிய பல்வேறு வகையான ஆடுகளின் இனங்களைக் கண்டறியவும் மற்றும் அவற்றின் உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும் இந்த ஆய்வு உதவும்.

(ii) உத்திரப்பிரதேசத்தில் உள்ள மத்திய ஆடுகள் பற்றிய ஆராய்ச்சிக்கான நிறுவனத்துடன், ஆடுகளைத் தாக்கும் நோய்களைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதற்காக இரண்டாவது ஒப்பந்தம்

மேற்கொள்ளப்படவுள்ளது. ஆரம்ப நிலையிலேயே நோயினைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல் மற்றும் மேலும் நோய் பரவாமல் தடுத்தல் ஆகியவை இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

**குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்**

**34.** அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (குறள்-226)

அதாவது, வறியவரின் பெரும்பசித் துன்பத்தை ஆற்றுதலே ஒருவன் தான்பெற்ற பெருஞ்செல்வத்தை சேமிக்கும் இடமாகும் என்பது திருவள்ளுவர் வாக்கு. நகர மற்றும் கிராமப்புற மக்கள் அனைவரும் தங்களது குடிமைப்பொருள் பங்கீட்டு அட்டை தொடர்பான அனைத்து சேவைகளையும் நேரடியாக இணையதளம் மூலம் பெறுவதற்கு ஒரு பிரத்தியேக இணையதளம் (Online portal) உருவாக்கப்படும். பொதுமக்கள் இத்துறையின் பல்வேறு சேவைகளை பொதுச் சேவை மையங்கள் (Common Service Centres) மூலமாக எளிதில் பெறலாம். பொது விநியோகத் திட்டத்தின்கீழ், மஞ்சள் அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் நேரடி மானியப் பணத்திற்கு பதிலாக 10 கிலோ அரிசி வழங்கப்படும். ஏற்கனவே சிவப்பு அட்டைதாரர்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுவது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே.

**35.** தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் மாநில அரசின் இலவச அரிசித் திட்டம் ஆகியவற்றின் கீழ் இலவச அரிசி வழங்க, விவசாயிகளிடமிருந்து பரவலாக்கப்பட்ட முறையில் நெல் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் நெற்பயிருக்குக் குறைந்தபட்ச ஆதார விலை (Minimum support price) பெறுவதை உறுதிசெய்ய இயலும். நிதிநிலைச் சிரமங்கள் இருந்த போதிலும், எனது அரசு பாப்ஸ்கோ (PAPSCO) ஊழியர்களின் தேவைகளை மனிதநேயத்தோடு கவனத்தில் கொண்டு அவர்களின் இன்னல்களைக் குறைக்கும் வண்ணம், தொழிலாளர் ஊதியம் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) நிலுவைக்காக ₹ 7 கோடியை வழங்கிட 2019-20ஆம் நிதி ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

**36.** சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களின் நலனைப் பாதுகாத்திடவே கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனது அரசு, குறிப்பாக வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த கூட்டுறவுப் பிரிவுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் அளித்துவருகிறது. திறன் மிக்க பால் கறவையாளர்களின் எண்ணிக்கை குறைந்து

வருவதால், 30 தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு தலா மூன்று பால் கறவை இயந்திரங்கள் இந்த ஆண்டு வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் கொள்முதல் செய்யப்பட்ட பாலைப் பதப்படுத்த, மூன்று தொடக்கக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் தலா 5,000 லிட்டர் பால் கொள்ளளவுத் திறன் கொண்ட பால் குளிரூட்டும் சாதனங்கள் அமைக்கப்படும். தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் (NDDB) மூலம் பாண்லே நிறுவனத்தை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**37.** நியாய விலைக் கடைகளை நடத்துவதற்கான செலவுகளை ஈடு செய்யவும், மேம்பட்ட சேவையை வழங்கவும், நியாய விலைக் கடைகளுக்கு அரசு தற்போது வழங்கும் வருடாந்திர மானியத் தொகையான ₹ 90,000ஐ, ₹ 1,75,000ஆக உயர்த்தி வழங்கப்படும். நியாயவிலைக்கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூடுதல் மானியக்கொடை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். புதுச்சேரி நகரக் கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களின் சேவைக்காக தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரங்கள் (ATM) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரி மாநிலக் கூட்டுறவு வங்கியின் மூன்று கிளைகளுக்கு ATM சேவை விரிவுபடுத்தப்படும். பொதுமக்கள் மற்றும் புதுச்சேரி

கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்கள், பணமில்லா பரிவர்த்தனை மேற்கொள்ளும் வகையில் கைபேசி மற்றும் இணையதள வங்கிச்சேவை (Mobile and Internet Banking) வழங்கப்படும்.

**பள்ளிக் கல்வி**

**38.** கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை (குறள்-400)

அதாவது, கல்வியே ஒருவருக்குக் குற்றமற்ற சிறப்புடைய செல்வமாகும். ஏனைய செல்வங்கள் எல்லாம் செல்வங்களாகக் கருதப்படமாட்டாது என்பது திருவள்ளுவர் வாக்கு. மக்களின் தனிமனித, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும், நல்ல சிந்தனைகளையும், எண்ணங்களையும் வளர்ப்பதற்கும், சமூகத்தில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. எனது அரசு புதுச்சேரியில் பள்ளிக்கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதுடன் பல்வேறு மாணவர் நலத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, இலவச சீருடை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், ஒரு ரூபாய் கட்டணத்தில் பேருந்து வசதி, சிற்றுண்டி திட்டத்தின்கீழ் காலையில் பால் வழங்குதல் முதலிய நலத்திட்டங்கள் மதிய உணவு திட்டத்துடன் எந்தவிதத் தங்கு தடையின்றி முன்பருவ வகுப்புகள் முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**39.** அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் "நீட்" (NEET) தேர்வின் மூலம் அதிக எண்ணிக்கையில் மருத்துவம் சார்ந்த படிப்பில் சேருவதற்கு ஏதுவாக, தரம் வாய்ந்த "நீட்" (NEET) தேர்வுப் பயிற்சி அளிக்கப்படும். பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக இந்த நிதி ஆண்டில் ₹ 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40.** அட்சயப் பாத்திரம் என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து மதிய சத்துணவுத் திட்டத்தை 2019-20ஆம் கல்வி ஆண்டு இறுதி முதல் நடைமுறைப்படுத்த உள்ளோம். இதன்மூலம் புதுச்சேரி பகுதியில் சுமார் 50,000 மாணவர்கள் பயனடைவார்கள்.

**41.** அனைத்து அரசுப் பள்ளிகளிலும் உள்ள ஆசிரியர் அல்லாத ஊழியர் ஒருவர் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் வளாகத்தைப் பராமரிக்க, பராமரிப்பு மேலாளராக (Estate Manager) நியமிக்கப்படுவார். அவர் தினசரி, பள்ளியின் தூய்மை, கழிப்பிடங்களின் செயல்பாடுகள், குடிநீர்த் தேவைகள், பாதுகாப்பு வசதிகள் முதலியன குறித்த அறிக்கையை கைப்பேசி செயலி மூலம் கல்வித்துறைக்கு நண்பகலுக்கு முன்பு சமர்ப்பிப்பார். இதற்கான செயலி விரைவில் உருவாக்கப்படும். கல்வித்துறை அலுவலர்கள் இவற்றை கவனமுடன் பரிசீலித்து பள்ளிகளில் உள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுப்பர்.

**42.** மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (DIET) சீரமைக்கப்படும். பெற்றோர்களை பள்ளிகளின் வளர்ச்சியில் பங்கு பெறச் செய்வதற்காக சிறப்பு பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படும்.

**43.** அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு தற்காப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும், மாணவர் காவல் படை (Student Police) என்ற புதிய திட்டத்தைப் புதுச்சேரியில் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**44.** புதுச்சேரியில் இரண்டு, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் தலா ஒன்று என ஐந்து பள்ளிகளைத் தேர்வு செய்து அவற்றை சீர்மிகு பள்ளிகளாக (School of Excellence) தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து நவீன தகவல் தொழில்நுட்ப வசதி மற்றும் ஆய்வகங்களுடன் கூடிய முன்பருவ வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரை கொண்ட சீர்மிகு பள்ளிகளாக இவை செயல்படும்.

**45.** ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அரசு ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் சிறார்களின் தாய்மொழி (தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு) மற்றும் ஆங்கில மொழியில் தங்களது திறனை மேம்படுத்திட புதிதாக இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

ஒரு புதிய வாசிப்புத் திட்டம் (DEAL - Development of Early Academic Learning) அனைத்து ஆரம்ப பள்ளிகளுக்கும் இந்த ஆண்டே விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் பள்ளிச் சிறார்களின் மொழிப்புலமை செம்மையடையும்.

**46.** மழலையர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மன அழுத்தம் மற்றும் சுமையைப் போக்க "மகிழ்ச்சியான பாடத்திட்டம்" (Happiness Curriculam) புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு "தொழில் முனைவோராக்கும் பாடத்திட்டம்" (Entrepreneur Curriculam) புதிதாக அறிமுகப்படுத்தப்படும். மேற்கண்ட இரு திட்டங்களும், புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பிராந்தியங்களையும் உள்ளடக்கிய 20 பள்ளிகளில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்படும். பின்னர் இத்திட்டம் அனைத்துப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலம்

**47.** புதுச்சேரி மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கான 2010 முதல் நிலுவையிலுள்ள ஆண்டு மானியம், பங்கேற்பு மானியம் மற்றும் அமைப்பு மானியம் ஆகியவை பாக்கியில்லாமல் தற்போது வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ₹ 1.70 கோடி செலவாகும். தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவையிலுள்ள

ரொக்கப் பரிசுகள் வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதுச்சேரி மாநில விளையாட்டுக் கழகத்தில் பணியாற்றும் விளையாட்டுப் பயிற்றுநர்களின் குறைந்தபட்ச ஊதியம் ₹ 10,000லிருந்து ₹ 22,000ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், மூத்த பயிற்றுநர்களின் தொகுப்பு ஊதியம் ₹ 25,000லிருந்து ₹ 30,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**48.** புதுச்சேரி இலாசுப்பேட்டையில் உள்ள பல்நோக்கு உள்ளரங்கு அருகில் ₹ 12 கோடி செலவில், 100 படுக்கைகள் கொண்ட இந்திய விளையாட்டு ஆணையத்தின் மகளிர் விடுதி, இவ்வருடம் நவம்பர் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும். புதுச்சேரியின் விளையாட்டு வீராங்கனைகள் இங்கேயே தங்கி பயின்று, தங்கள் விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச அளவில் சாதனைகள் புரிய இவ்வசதி பெரிதும் உதவும். இந்திய விளையாட்டு ஆணையத்தால் நடத்தப்படும், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆடவர் மற்றும் மகளிருக்கு இடையேயான, அகில இந்திய கைப்பந்துப் போட்டிகள் வரும் அக்டோபர் மாதத்தில் புதுச்சேரியில் நடைபெற இருப்பது நமக்கு பெருமை அளிப்பதாகும்.

**49.** மாநில அளவிலான பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகளில் பங்கேற்கும் மாணவ மாணவியருக்கு, தினப்படி ₹ 125லிருந்து ₹ 225ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால்

சுமார் 3,000 மாணவ மாணவியர் பயனடைவர். மாநில அளவிலான பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் வகையில் காரைக்கால் (செப்டம்பர்) மாஹி மற்றும் ஏனாம் (நவம்பர்) மற்றும் புதுச்சேரி (டிசம்பர்) ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் 15 விளையாட்டுப் பிரிவுகளில் நடைபெறவுள்ளது. இதில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் 3 விதமான வயது வரம்புகளில் சுமார் 3,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்பர்.

**50.** பள்ளிகளுக்கு இடையிலான தேசிய அளவில் போட்டிகளில் பதக்கம் வென்ற பள்ளி மாணவ மாணவியருக்கு கீழ்க்கண்ட முறையில் முதன்முறையில் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

| பதக்கம் | தனி விளையாட்டு | அணி விளையாட்டு |
|---|---|---|
| தங்கம் | ₹ 25,000 | ₹ 12,000 |
| வெள்ளி | ₹ 15,000 | ₹ 8,000 |
| வெண்கலம் | ₹ 10,000 | ₹ 5,000 |

மாநில அளவிலான பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் சாம்பியன்ஷிப் வென்ற மாணவர்களுக்கான ரொக்கப்பரிசுத் தொகை உயர்த்தப்பட உள்ளது. தனி விளையாட்டுக்கான ரொக்கப்பரிசு தற்போதுள்ள ₹ 1,000லிருந்து ₹ 2,000ஆகவும் அணி விளையாட்டுக்கான ரொக்கப்பரிசு தற்போதுள்ள

₹ 2,000லிருந்து ₹ 5,000ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். குறிப்பிடத்தக்க சாதனை புரிந்த மாணவர்களுக்கு ₹ 10,000 ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

**51.** தேசிய அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற்று, பதக்கங்களைப் பெறும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு முதலமைச்சர், கல்வித்துறை அமைச்சர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரின் சிறப்பு விருதுகளும் ₹ 20,000 பணமுடிப்பும் வழங்கப்படும்.

**52.** 'கேலோ இந்தியா' திட்டத்தின்கீழ் புதுச்சேரி சாரதாம்பாள் நகரில் ₹ 5 கோடி மதிப்பீட்டில் ஒரு உலகத்தரம் வாய்ந்த நீச்சல்குளம் கட்டப்பட்டு வருகின்றது. இதற்கான பணிகள் 2020 மார்ச் மாதத்தில் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உப்பளத்தில் உள்ள இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில் ₹ 7 கோடி செலவில் உலகத் தரம் வாய்ந்த செயற்கைத் தடகளம் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்படும். தலா ₹ 10 இலட்சம் மதிப்பீட்டில் 10 கைப்பந்து மைதானங்கள் முறையே (i) இந்திராகாந்தி விளையாட்டு வளாகம், உப்பளம், (ii) பாகூர், (iii) ஏம்பலம், (iv) அரியாங்குப்பம், (v) மணவெளி, (vi) டி.ஆர். பட்டினம், காரைக்கால், (vii) திருநள்ளாறு, காரைக்கால், (viii) பந்தக்கல், மாஹே, (ix) சாவித்திரி நகர், ஏனாம், (x) குரியம்பேட்டா, ஏனாம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டே அமைக்கப்பட உள்ளன.

**53.** விமான நிலைய ஆணையத்தின் சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தின்கீழ் நான்கு பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் முறையே தவளக்குப்பம் ராஜீவ்காந்தி அரசு கலைக் கல்லூரி வளாகம், பாகூர், டி.ஆர். பட்டினம் (காரைக்கால்) மற்றும் கனகாலப் பேட்டா (ஏனாம்) ஆகிய இடங்களில் தலா ₹ 1.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதற்காக விமானநிலைய ஆணையம் ₹ 5 கோடியை ஏற்கனவே வழங்கியுள்ளது. இரண்டாவது கட்டமாக எட்டு பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் புதுச்சேரி பிராந்தியத்தில் வில்லியனூர், ஏம்பலம், ஊசுடு, அரியாங்குப்பம், மண்ணாடிப்பட்டு, நெட்டப்பாக்கம் ஆகிய இடங்களிலும் காரைக்காலில் திருநள்ளாரிலும் மற்றும் மாஹேயில் பள்ளூரிலும் அமைக்கப்படும்.

**கலை மற்றும் பண்பாடு**

**54.** புதுச்சேரி அரியாங்குப்பத்தில் ₹ 8.89 கோடியில் தாகூர் கலாச்சார வளாகம் அமைப்பதற்கான கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு இந்த நிதி ஆண்டிலேயே பணிகள் முடிக்கப்படும். ஏனாம் பகுதியில் தாகூர் கலாச்சார வளாகம் அமைப்பதற்கான இடம் கண்டறியப்பட்டு அதற்கான கருத்துரு மத்திய அரசின் நிதி பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதல் விரைவில் கிடைக்கப் பெறும். காரைக்கால் பகுதிக்கான

இதுபோன்ற திட்டம் மத்திய அரசின் அனுமதிக்காக வெகுவிரைவில் அனுப்பப்படவுள்ளது. புதுச்சேரி அருங்காட்சியத்தைப் புனரமைத்து இரண்டு அருங்காட்சியகங்களாக (ஒன்று செயின்ட் லூயி வீதியிலும், மற்றொன்று ரோமன் ரோலண்டு வீதியிலும்) அமைப்பதற்கான திட்டம் ₹ 11 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதல் விரைவில் பெறப்படும்.

**55.** வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பூரணாங்குப்பம் அரசுக் கிளை நூலகம் அடுத்த மாதம் முதல் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு கட்டடத்தில் இருந்து இயங்கும். காரைக்கால் எஸ்.ஆர். ரங்கநாதன் அரசு நூலகத்தின் நவீனமயமாக்கும் பணிகள் ₹ 76 இலட்சம் செலவில் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இரண்டு மாதங்களில் பணிகள் முடிவுற்று இந்த நூலகம் பயன்பாட்டுக்கு விடப்படும். புதுச்சேரியில் பத்து எழுத்தாளர்களுக்கு கம்பன் புகழ் விருது அடுத்த மாதம் வழங்கப்படும். நிலுவையில் உள்ள கலைமாமணி, தமிழ்மாமணி, தெலுகு ரத்னா, மலையாள ரத்னா, தொல்காப்பியர் விருது, நேரு குழந்தைகள் விருது உள்ளிட்டவை 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தகுந்த கலைஞர்கள் மற்றும் அறிஞர்களுக்கு வழங்கப்படும். புதுச்சேரி ஓவியர்கள் பயன்பெறும் வகையில் நிகழ்கால ஓவியக்கூடம் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் புதுச்சேரி அருங்காட்சியகம் அருகே அமைக்கப்படும்.

**உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி**

**56.** விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். (குறள்-410)

அதாவது, அறிவொளி தரும் நூல்களைக் கற்றவர்கள் மனிதர்கள். அவ்வாறான நூல்களைக் கல்லாதவர்கள் விலங்கிற்கு ஒப்பாவர் என்பது திருவள்ளுவர் கூற்று. எனது அரசு உயர்கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஒரு சிறந்த உயர்கல்வி மையமாகத் திகழ்ந்து வருகிறது. இதை மேலும் விரிவுபடுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**57.** எனது அரசு, பெருந்தலைவர் காமராஜர் உயர் கல்வி நிதி உதவித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்குத் தேவையான ₹ 41 கோடி நிதியை நடப்பு ஆண்டில் ஒதுக்கியுள்ளது. மத்திய உயர்கல்வித் திட்டத்தின்கீழ் (RUSA), மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதி உதவியுடன் ₹ 26 கோடி திட்ட மதிப்பீட்டில் ஏனாம் பகுதியில் புதிய அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படும் என்பதை இந்தப் பெருமைவாய்ந்த அவையில் கூறிக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், இத்திட்டத்திற்கு, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், முதற்கட்டமாக ₹ 7.80 கோடியை அளித்துள்ளது.

**58.** புதுச்சேரி பொறியியல் கல்லூரியை புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாகத் தரம்உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான மசோதா சட்டப்பேரவையில்

அறிமுகம் செய்யப்படும். இதுபோல, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், தேசிய சட்டப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், கலை மற்றும் அறிவியல் படிப்புகளுக்காக பிரத்தியேகமாக மாநில பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**59.** காரைக்கால் அரசு வேளாண் கல்லூரி மற்றும் புதுச்சேரியில் உள்ள அரசு கால்நடைக் கல்லூரியை உள்ளடக்கி உருவாக்கப்படவுள்ள வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான ஆரம்பக்கட்ட நிர்வாக ஒப்புதல் பெறும் வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

**60.** அரசுக்கு நிதிச் சவால்கள் இருந்தபோதிலும், பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (AICTE) ஆகியவற்றின் பரிந்துரைகளின்படி ஏழாவது மத்திய ஊதியக் குழு சம்பள விகிதங்கள் அனைத்து அரசு நிதிஉதவி பெறும் கல்லூரிகளில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அதற்கு ஈடான பணியில் உள்ளவர்களுக்கு அமுல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக வருடத்திற்கு ₹ 40 கோடி கூடுதல் நிதி தேவைப்படுகிறது. இந்த ஆண்டு, இதற்காகத் தேவையான நிதியை எனது அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**61.** புதுச்சேரி மாநில உயர்கல்வி அமைப்பின் (PHEC) பரிந்துரைப்படி, அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் கல்லூரிகளில் 10 புதிய இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் இந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், புதிய இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை வரும் கல்வி ஆண்டில் (2020-21), ஏனாம், மாஹே உள்ளிட்ட புதுச்சேரியின் அனைத்து பிராந்தியங்களிலும் தொடங்கிடத் தேவையான அனைத்து ஆயத்த வேலைகளும் இந்த ஆண்டே துவக்கப்படும். இவற்றில் ஏனாமில் துவக்க எண்ணியுள்ள இளங்கலை (தாவரவியல்), இளங்கலை (விலங்கியல்) மற்றும் இயந்திரவியல் பொறியியல் பட்டயப் படிப்பு ஆகியன அடங்கும். அரசு மற்றும் அரசு நிதிஉதவி பெறும் பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics), தற்போதுள்ள பாடப்பிரிவுகள் மறுசீராய்வு செய்யப்பட்டு மாணவர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தரும் பாட அமைப்பாக மாற்றியமைக்கப்படும். பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் பயிலும் மாணவிகளுக்குத் தங்கும் விடுதி வசதிகள் செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**62.** புதுச்சேரி, கருவடிக்குப்பம் காமராஜர் மணிமண்டப வளாகத்தில், IAS, IPS உள்ளிட்ட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் மாணவர்களை உரிய முறையில் தயார்

செய்வதற்காக ஒரு ஒருங்கிணைந்த பயிற்சி மையம் அமைக்கப்படும். இது மட்டுமில்லாமல் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக, தேவையான தொழில் முனைவோர் பயிற்சிகள் மாணவ மாணவியருக்கு இங்கு அளிக்கப்படும். காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்களிலும் இதுபோன்ற பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். ஏனாமில் இந்தப் பயிற்சி மையம் டாக்டர் அம்பேத்கர் விஞ்ஞான மண்டப வளாகத்தில் இயங்கும். இந்த மையங்கள் உயர் கல்வித்துறை மற்றும் CENTAC கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும்.

**கலால்**

**63.** மதுபானங்களுக்கு முறையாக வரி செலுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்திட கைபேசி செயலி ஒன்றை புதுச்சேரி கலால் துறை அலுவலர்களுக்காக வெளியிட எனது அரசு உத்தேசித்துள்ளது. மேலும், நுகர்வோர் நலனைக் கருத்தில் கொண்டு நம் மாநிலத்தில் விற்கப்படும் மதுபானங்கள் தொடர்பான அனைத்து விரிவான விவரங்களையும் நுகர்வோர் பெற வசதியாக ஒரு புதிய செயலி அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம், விற்கப்படும் மதுபானங்கள் குறித்த விவரங்களை அனைத்து நுகர்வோர்களும் அறிந்துகொள்ளலாம்.

**64.** கலால் துறையில் இணையதளம் சார்ந்த “புதிய கலால் விநியோக தகவல் மேலாண்மை முறை” செயல்படுத்தப்படும். இதன்மூலம் மதுபானங்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்து பெர்மிட் போன்றவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணிப்பு செய்ய இயலும்.

**மின்விசை**

**65.** புதுச்சேரி யூனியன் பிரதேசம் மின்சாரத் தேவையில் தன்னிறைவு பெற்றுள்ளது. தரமான மற்றும் தடையில்லா மின்சாரத்தை அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்குவது எனது அரசின் முக்கிய நோக்கமாகும். மின்பகிர்மானத்தில் ஏற்படும் இழப்பீட்டைத் தடுக்கவும் மின்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், திருபுவனை மற்றும் வில்லியனூர் துணைமின் நிலையத்திலுள்ள மூன்று 16MVA மின்மாற்றிகளை, 25MVA திறனுடைய மின்மாற்றிகளாக, இந்த ஆண்டு மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மின்சாரத்தைச் சேமிக்கும் விதமாகவும், தெரு விளக்குகள் சரிவர இயங்குவதற்காகவும் தற்போது உபயோகத்தில் உள்ள சோடியம் மற்றும் குழல் விளக்குகள் மாற்றப்பட்டு, LED மின்விளக்குகள் பொருத்தப்படும்.

**66.** மேலும், மின்னூட்டம் மற்றும் மின்பகிர்மான கட்டமைப்பு வசதிகளைப் பலப்படுத்தி, பெருகிவரும் மின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும், சூரியமின் உற்பத்தியை பெருக்கும்

பொருட்டும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) கடன் உதவி பெற ₹ 983 கோடி மதிப்பிலான விவரமான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், மத்திய மின்சார ஆணையம் தற்போது தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளது. மேலும், புதுச்சேரிக்கான மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (JERC) மின்னூட்டம் மற்றும் மின்பங்கீட்டிற்கு, நிதி ஆண்டு 2019-20 முதல் 2021-22 வரை பல்வேறு பணிகளை ₹ 550.35 கோடி செலவில் மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் தரமான மின்சாரம் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுவதுடன் மின்சாரப் பகிர்மான இழப்பு 10 விழுக்காடு அளவில் இருக்குமாறு கொண்டுவரப்படும்.

**67.** மின் விநியோகத் திட்டங்களின்கீழ், 60 புதிய மின்மாற்றிகள் அமைக்கவும், தற்பொழுதுள்ள 20 மின்மாற்றிகளின் திறனை அதிகரிக்கவும் இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 20 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு உயர்மின் அழுத்தப் பாதைகள் மற்றும் 50 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு குறைந்தமின் அழுத்தப் பாதைகள் அமைத்திடவும் இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, 2 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு உயர்மின் அழுத்தப் பாதைகள் மற்றும் 30 கிலோ மீட்டர் தூரம் அளவிற்கு குறைந்தமின் அழுத்தப் பாதைகளின் திறனை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**68.** மேற்கண்ட மின்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதுடன், 15 தொழிற்சாலைகளுக்கு உயர்மின் அழுத்த இணைப்புகளும், 50 தொழிற்சாலைகளுக்கு குறைந்தமின் அழுத்த இணைப்புகளும் வழங்கப்படவுள்ளன. மேலும், 35 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 14,000 வீடுகளுக்கும், 2,000 வர்த்தக நிறுவனங்களுக்கும் மற்றும் 600 புதிய தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்படவுள்ளன. புதை மின்வடம் மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ், 5 கிலோ மீட்டர் தூரம் வரை உயர்மின் அழுத்தப் புதை மின்வடங்களும், மற்றும் 7 கிலோ மீட்டர் தூரம் வரை குறைந்த மின் அழுத்தப் புதை மின்வடங்களும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்தமின் அழுத்தம் உள்ள 150 மேல்நிலை மின் இணைப்புகளையும், 20 மேல்நிலை தெருமின் இணைப்புகளையும் புதை மின்வடங்களாக மாற்றிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**புதுப்பிக்கவல்ல மின்சக்தி**

**69.** சூரிய மின் சக்திப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, வீட்டு வளாகங்களிலும் மற்றும் வீட்டு மாடிகளிலும் சூரிய மின் உற்பத்தி செய்து வீட்டுப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் நுகர்வோருக்கு, உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை (Generation based incentive) மூன்று ஆண்டுகளுக்கு “முதல் வருகை முதல் சேவை” (First come first serve) என்ற அடிப்படையில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**70.** இந்த வருடம் 15,000 வீடுகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு வீட்டிலும் 1 KW முதல் 3 KWக்கு மிகாமல் சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்திட அரசு மானியத்தில் சூரிய மின் தகடுகள் (solar panel) வழங்கும் திட்டம் இந்த ஆண்டே நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் குறித்து மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத்துடன் கூடிய விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த நபார்டு வங்கி மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 15,000 வீடுகள்மூலம் இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு சுமார் 4.5 கோடி யூனிட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய இயலும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினால் வீடுகளின் மாதாந்திர மின்கட்டணம் ₹ 95லிருந்து ₹ 400 வரை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறே தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சூரியசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்திடவும், அரசுமூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், தொழிற் சாலைகளுக்கு 20 விழுக்காடு மானியமும் வழங்கப்படும். எனது அரசு, அரசுக்குச் சொந்தமான கட்டடங்களிலும் உபரி நிலங்களிலும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிவெடுத்துள்ளது.

**71.** மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்திட சூரிய மின்சக்தி நிகர அளவீட்டுக் கொள்கை (Gross Net Metering Policy) அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் வெளியிலிருந்து பெறப்படும்

மின்சாரக் கொள்முதல் கணிசமான அளவு குறையும். மேலும், கணிசமான அளவு நிதி சேமிப்பும் அரசுக்கு இதனால் இருக்கும்.

**72.** கட்டட மின்நுகர்வு செயல்திறன் திட்டத்தின்கீழ் (Building Energy Efficiency Programme) நம் புதுச்சேரி மாநிலத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் மின்நுகர்வுத் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

**73.** கட்டடங்களில் மின்சாரப் பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில் எனது அரசு, கட்டட மின்நுகர்வு செயல்திறன் விதிகளை (Energy Efficiency Building Code) அமுல்படுத்த எண்ணியுள்ளது. இவ்விதி, 500 சதுர மீட்டர் அளவு மற்றும் அதற்குமேல் கொண்ட கட்டடங்கள் மற்றும் 100 KW மின்திறன் பயன்படுத்தும் அனைத்து கட்டடங்களுக்கும் பொருந்துமாறு இருக்கும்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலம்**

**74.** எனது அரசு மீனவ சமுதாய மக்களின் நலனுக்காக மீன்பிடித் தடைக்கால நிவாரணம், மழைக்கால நிவாரணம், முதியோர் ஓய்வூதியம் போன்ற பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மீனவக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தற்பொழுது வழங்கப்படும் 61 நாட்களுக்கான மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை ₹ 5,500லிருந்து - ₹ 6,500 ஆகவும், மழைக்கால நிவாரண உதவித்தொகை ₹ 2,500லிருந்து - ₹ 3,000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில்

நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதன்மூலம் 20,000 மீனவக் குடும்பங்கள் பயனடைவார்கள். இதனால் அரசுக்கு வருடத்திற்கு ₹ 3 கோடி கூடுதல் செலவாகும்.

**75.** தற்போது 8,470 மீனவ சமுதாயக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும் என்பதை இந்த மாண்புமிகு அவையில் அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

(i) 50 வயது முதல் 59 வயது வரை - ₹ 1,570லிருந்து ₹ 2,000ஆக உயர்வு

(ii) 60 வயது முதல் 79 வயது வரை - ₹ 2,090லிருந்து ₹ 2,500ஆக உயர்வு

(iii) 80 வயதிற்கு மேற்பட்டோர் - ₹ 3,135லிருந்து ₹ 3,500ஆக உயர்வு

இதனால் அரசுக்கு வருடத்திற்கு சுமார் 50 இலட்சம் கூடுதல் செலவாகும்.

**76.** மேலும், இரும்பு / மரவிசை / கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் படகுகள், இயந்திரம் பொருத்தாத படகுகள், கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் வல்லம் படகுகள், 1 டன் முதல் 3 திறன் கொண்ட சிறு கனரக வாகனம் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீன்பிடி உபகரணங்கள் முதலியவற்றை வாங்குவதற்கு மீனவர்களுக்குத் தற்போது வழங்கப்படும்

50 விழுக்காடு மானியம் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் 510 இரும்பு / மரவிசைப்படகு / கண்ணாடி நுண்ணிழை பிளாஸ்டிக் படகு உரிமையாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் பராமரிப்புச் செலவுத் தொகை ₹ 20,000லிருந்து ₹ 30,000ஆகவும் கண்ணாடி நுண்ணிழைப் பிளாஸ்டிக் (செவுள் வலை) படகுகளுக்கு ₹ 10,000லிருந்து ₹ 20,000ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். பதிவுசெய்துள்ள விசைப்படகு உரிமையாளர்களுக்கு தங்களின் படகுக்குச் செலுத்த வேண்டிய காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் 90 விழுக்காடு துறையின் மூலமாக செலுத்தப்படும். 2,650 மீன் விற்பனையாளர்களுக்கு ₹ 1.33 கோடி செலவில் ஐஸ் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும்.

**77.** மத்திய அரசின் "சேமிப்பு மற்றும் நிவாரண நிதி" (Savings-*cum*-Relief Fund) திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்களிப்புத் தொகையான ₹ 7.92 கோடி, 26,379 மீனவப் பயனாளிகளுக்கு தலா ₹ 3,000 வீதம் வழங்கப்படும். "நீலப் புரட்சி" திட்டத்தின்கீழ், கட்டுமரங்களுக்கு கியருடன் கூடிய வெளிப்புற இயந்திரம் கொள்முதல் செய்தல் (Outboard motor with gear), வெளிப்புற இயந்திரம் மாற்றுதல், கடலில் மீனவர் பாதுகாப்பு, ஆழ்கடல் மீன்பிடிப்பு, இழுமடி வலைகளை மாற்றி மீன் வளத்தைக் காக்கும் தூண்டில்முறை மீன்பிடி சாதனங்களாக மாற்றுதல், மீன்வளர்க்கப் புதிய குளங்கள் அமைத்தல், மீன்

வளர்ப்புக் குளங்களை மறுசீரமைத்தல், மறுசீரமைக்கப்பட்ட குளங்களுக்குச் செலவு செய்த உள்ளீட்டுச் செலவுகள் முதலியவற்றிற்கு ₹ 13.66 கோடி நிதிஉதவி வழங்கப்படும்.

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்**

**78.** நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (குறள்-948)

அதாவது, தோன்றும் நோய், அதற்கான காரணம் மற்றும் நோயைக் தணிக்கும் வழி ஆகிய மூன்றையும் நன்கு அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் முக்கிய சுகாதாரக் குறியீடுகள் தேசிய அளவில் உயர்வான நிலையில் உள்ளன என்பது நமக்கு மிகுந்த நிறைவைத் தருகிறது. நாட்டின் பச்சிளம் குழந்தைகளின் சராசரி இறப்பு விகிதம் (Infant Mortality Rate) 1,000 குழந்தைகள் பிறப்பிற்கு 34 என்ற அளவில் இருக்கும் நிலையில், நமது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்த விகிதம் 1,000 குழந்தைகள் பிறப்பிற்கு 10 என்ற அளவில் மட்டுமே உள்ளது. மேலும், இந்த விகிதம் நாம் எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக வருங்காலத்தில் ஒற்றை இலக்க எண்ணிற்குக்கீழ் கொண்டு வரப்படும். இவ்வாட்சிப்பரப்பில் ஏறக்குறைய குழந்தைப் பிறப்பு என்பது முழுமையாக சுகாதார நிலையங்களிலேயே நிகழ்கிறது. 91.3 விழுக்காடு குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பூசி அளிக்கப்படுகிறது. ஆனால், இந்திய அளவில் சுகாதார நிலையங்களில் நிகழும் குழந்தைப் பிறப்பு

78.4 விழுக்காடாகவும், குழந்தைகளுக்கு நோய் தடுப்பூசி அளிக்கப்படுவது 62 விழுக்காடாகவும் மட்டுமே உள்ளது. புதுச்சேரியில் மருத்துவச் சேவைகள் சிறப்பாக வழங்கப்பட்டு வரும் நிலை இருப்பினும், என்னுடைய அரசு, பொதுமக்களுக்கு மேலும் சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையில் பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனைகளுடன் (Multi Speciality Hospitals) பல ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளது.

**79.** நோயாளிகளையும், விபத்தில் சிக்கிய நபர்களையும் அவசர மருத்துவ சிகிச்சைக்காக உடனடியாக அருகாமையில் உள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்வதை உறுதிசெய்யும் பொருட்டு, 108 எண் அவசர ஊர்தி சேவையைப் புற ஒப்படைப்பு (Out Sourcing) முறையில் பெறுவது என அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சாலை விபத்தில் சிக்கியோருக்கு உடனடியாக மருத்துவ வசதி கிடைக்கும்படி அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும் நபருக்கு ₹ 5,000 பணப்பரிசு அளிக்கப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். உடனடி மருத்துவ உதவிக்காக, நெரிசல் கொண்ட குறுகிய சாலைகளிலும் விரைந்துசென்று சிகிச்சை அளிக்கும் வகையில் ஜி.பி.எஸ். கருவி வசதிகொண்ட அவசர மருத்துவ சிகிச்சை வழங்கும் பயிற்சி பெற்ற நபர்களால் இயக்கப்படும் இரு சக்கர மோட்டார் வாகனம் (First Responder Vehicle) அறிமுகப்படுத்தப்படும்.

**80.** இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் பல்லுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மையம் மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மின்னணு-சுகாதாரத்திட்டம் (e-Health) படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படும். காரைக்காலில் உள்ள அரசுப் பொது மருத்துவமனையைச் சீரமைக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும். ஜிப்மர் மருத்துவமனையுடன் இணைந்து, காரைக்கால் மற்றும் ஏனாம் அரசுப் பொது மருத்துவமனைகளில் நேரடி மருத்துவக் கலந்தாய்வு மற்றும் மருத்துவ வல்லுனர் அறிவுரை முதலியவற்றைப் பெறுவதற்காக தொலை மருத்துவச் சேவை (Tele-Medicine) தொடங்கப்பட்டுள்ளது.

**81.** இந்திய மருத்துவக் கழகம், பட்டமேற்படிப்புப் படிப்புகளை மேலும் இரண்டு துறைகளில் (நுண்ணுயிரியல் பிரிவில்-4 இடங்கள் மற்றும் உடற்கூறியல் பிரிவில்-2 இடங்கள்) 2019-20ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மருத்துவ கல்லூரியில் துவங்க ஒப்புதல் அளித்துள்ளது. ₹ 7.17 கோடி செலவில் MRI ஸ்கேன் சேவைகள் அளிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் செயல்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும். மத்திய அரசின் நிதி உதவியின் மூலம் ₹ 9 கோடி செலவில் வில்லியனூரில் 50 படுக்கைகள் வசதியுடன் ஆயூஷ் (Ayush) மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களிடம் பகிர்ந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மற்றுமொரு ஆயூஷ் மருத்துவமனை ₹ 9 கோடி செலவில் ஏனாம்

பகுதியில் மத்திய அரசு உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது. இதேபோல, காரைக்கால் பகுதியில் 50 படுக்கைகள் வசதி கொண்ட ஆயூஷ் மருத்துவமனை கட்ட விரிவான திட்டம் மத்திய அரசுக்கு விரைவில் அனுப்பப்பட உள்ளது.

**82.** எனது அரசு, அனைத்துத் தரப்பு மக்களின் சுகாதார நலனைப் பேணும் நோக்கில், புதுச்சேரியில் விரிவான சுகாதார தகவல் மேலாண்மைத் திட்டத்தைத் தொடங்க உத்தேசித்துள்ளது.

**83.** மாறிவரும் மக்களின் வாழ்க்கை முறையின் காரணமாக ஏற்படும் தொற்று அல்லாத நோய்களின் (Non-communicable diseases) தாக்கத்தைக் கருத்தில்கொண்டு புதுச்சேரி பாரதி பூங்கா எதிரே உள்ள பழைய தலைமைச் செயலகக் கட்டிடத்தில் “வாழ்வியல் மேம்பாட்டு மையம்” (Lifestyle Modification Centre) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய ஆயூஷ் திட்ட உதவியுடன் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மையம் ஒன்றும் இந்த வளாகத்தினுள் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தில் யோகா கூடம், பொது அரங்கம் மற்றும் சுகாதார உணவுக் கூடம் ஆகிய வசதிகள் 2019-20 நிதி ஆண்டில் ஏற்படுத்தப்படும்.

**84.** நீரிழிவு நோயாளிகள் பயன்பெறும் வகையில் அலைபேசி / கணினி மூலம் நோயாளிகள் பற்றிய தகவல்களை சேகரித்து அவர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்கும் வகையில்

ஒரு புதிய திட்டத்தை (Block Chain Technology) இந்திரா காந்தி அரசு மருத்துவமனை மற்றும் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் இந்த ஆண்டு செயல்படுத்தவுள்ளது.

**85.** கொரவள்ளிமேட்டில் உள்ள துணை சுகாதார மையம், சுகாதார நல மையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. எனது அரசு, புதுச்சேரியிலுள்ள 40 ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 81 துணை சுகாதார மையங்களை உள்ளிருப்பு மருத்துவர், செவிலியர் மற்றும் யோகா வசதிகளுடன் கூடிய சுகாதார நல மையங்களாகத் (Health Wellness Centre) தரம் உயர்த்த மத்திய அரசிடமிருந்து ₹ 13.13 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. முழுமையான உடற்பரிசோதனை செய்ய, குறிப்பாக கிராமப்புற நோயாளிகள் பயன்பெறும் வகையில், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய சுகாதார நல மையங்களாக இவை திகழும். புதுச்சேரி அரசு பொது மருத்துவமனைக்கும் அனைத்து சுகாதார மையங்களுக்கும் இடையில் தொலை மருத்துவச் சேவை (Tele Medicine) மருத்துவ வல்லுநர்களின் அறிவுரையைப் பெறும்பொருட்டு தொடங்கப்படும். ராஜீவ் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை கட்டுவதற்காக நிலத்தை கையகப்படுத்திய வகையில், மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ₹ 85 கோடி ஈட்டுத் தொகையை (Land acquisition compensation) நடப்பு ஆண்டில் வழங்க வேண்டியுள்ளது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். எனது அரசு

இந்தத் தொகையை நடப்பு ஆண்டில் செலுத்துவதற்குத் தேவையான நிதியை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**86.** புதுச்சேரி மாநிலத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களில் உள்ள மருத்துவ இளங்கலை மற்றும் முதுகலை பட்ட வகுப்பு இடங்களில் 50 விழுக்காட்டினை புதுச்சேரி அரசுக்கு ஒதுக்கீடு செய்வதற்கான சட்டம் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டு 50 விழுக்காடு அரசு ஒதுக்கீடு எதிர்வரும் கல்வியாண்டில் (2020-21) அமுல்படுத்தப்படும்.

**87.** பிரதம மந்திரி ஆயுஷ் காப்பீட்டு திட்டத்தின்கீழ் பயன்பெறும் நோயாளிகளுக்கு ₹ 5 இலட்சம் வரை மருத்துவக் காப்பீடு அளிக்கும் திட்டம் செப்டம்பர் 1 ஆம் தேதி முதல் அமுலுக்கு வரும். முதல்கட்டமாக, 1,03,474 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைவார்கள். இத்திட்டம் வெகுவிரைவில் புதுச்சேரி மாநிலம் முழுவதும் பின்னர் விரிவுபடுத்தப்படும்.

### இந்து அறநிலையத்துறை

**88.** 12 வருடங்களுக்கு மேலாக குடமுழுக்கு நடைபெறாத திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற நிதிஉதவி அளிக்கப்படும். இந்து அறநிலையத்துறை மற்றும் வக்ஃபு

வாரியத்தை வலுப்படுத்த அனைத்து நிர்வாக முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அனைத்துக் கோயில்களின் தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள், கடவுள் உருவச் சிலைகள் மற்றும் அசையும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் மின்னணு (டிஜிட்டல்) முறையில் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். கோயில்களின் அசையாச் சொத்துக்களை நில அளவை செய்து அவற்றை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். குத்தகைக்கு விடப்பட்ட கோயில்களின் சொத்துக்களுக்கு நியாயமான வாடகைத் தொகையை வசூலித்து அதன்மூலம் திருக்கோவில்களின் வருவாயைப் பெருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கோயில்களின் அசையாச் சொத்துக்கள் பற்றிய விவரங்கள் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட கோயில் வளாகத்தில் வைக்கப்டும். இது இணையதளத்திலும் மக்கள் பார்வைக்குப் பதிவேற்றம் செய்யப்படும்.

**தொழில்கள்**

**89.** நாடு முழுவதும் 1-7-2017 முதல் சரக்குகள் மற்றும் சேவை வரி (GST) நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தேவையான வரிச்சலுகைகள் மற்றும் குறிப்பிட்ட கால வரையிலான வரி விலக்கு (Tax holidays) ஆகியவற்றை நம் அரசால் தற்போது வழங்க இயலாத நிலை

உள்ளது. இது இவ்வாட்சிப்பரப்பின் தொழில் மற்றும் வணிக வளர்ச்சியில் நாம் எதிர் கொண்டுள்ள மிகப்பெரிய சவாலாகும். இருப்பினும், புதுச்சேரி அரசு, அதன் வரம்பு மற்றும் அதிகாரத்திற்குட்பட்டு தற்போதுள்ள மற்றும் புதிய தொழில்கள் தொடங்கத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் விதமாக, புதிய தொழிற்கொள்கையை 2016–ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. இது அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது என்பது மிகையல்ல.

**90.** மத்திய அரசு, நடுத்தர மற்றும் குறுந்தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு தொழில்நுட்பக் கருவி அறை மையங்களை (Tool Room Technology Centres) நாட்டின் பல்வேறு இடங்களில் நிறுவி வருகிறது. புதுச்சேரியிலும் இவ்வாறு ஒரு மையம் நிறுவிட 10 ஏக்கர் நிலம் மத்திய நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள் அமைச்சகத்திடம் முன்னர் நம் அரசால் ஒப்படைக்கப்பட்டது. இதன் கட்டுமானப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளதுடன், செப்டம்பர் 2019–ல் இம்மையம் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மையத்தின் மூலம் நடுத்தர மற்றும் குறுந்தொழில் வளர்ச்சிக்கு நம் ஆட்சிப்பரப்பில் புதிய உத்வேகம் கிடைக்கும்.

**91.** புதுமையான படைப்பாற்றலுடன் தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் நோக்கில் எனது அரசு “ஸ்டார்ட்அப்” (Startup) கொள்கையை வகுத்துவருகிறது. இக்கொள்கை விரைவில்

வெளியிடப்படும். எனது அரசு இவ்வாட்சிப்பரப்பில் எளிதில் தொழில் துவங்கும் சூழலை உருவாக்குவதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. மேலும், தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான உரிமங்கள் / அனுமதி வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து, எளிதில் தொழில் துவங்குவதை உறுதி செய்யும் வண்ணம் இணையதளம் ஒன்றைத் துவங்கவுள்ளது.

**92.** நம் ஆட்சிப்பரப்பில் வாய்ப்புள்ள உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைப்பது தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவும். எனவே, எனது அரசு, மத்திய அரசின் நிதி உதவியுடன் புதுச்சேரி பகுதியில் உள்ள சேதராப்பட்டு மற்றும் காரைக்காலில் உணவு பதப்படுத்தும் மையங்கள் (Food Processing Centres) அமைக்க பிப்டிக் நிறுவனம் மூலம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**தகவல் தொழில்நுட்பம்**

**93.** அரசு நிர்வாகம் திறம்படச் செயல்பட தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு முக்கியமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பொதுமக்களுக்குக் குறித்த நேரத்தில் தடையின்றி வெளிப்படைத் தன்மையுடன் அரசு சேவைகளை மின்னணு-மாவட்டத் திட்டம் (e-district) மூலம் விரிவுபடுத்தி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடைத்தரகர்கள்

மற்றும் முகவர்களின் தலையீடின்றி பொதுமக்கள் அரசின் பல்வேறு சேவைகளை எளிதில் பெற, மின்னாளுமை (e-governance) வழிவகுக்கிறது. இதன்மூலம், போலி ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் பயன்பாடு முற்றிலும் தடுக்கப்படும். அரசு அலுவலகங்களில் கோப்புகள் தயாரித்தல், குறிப்புகள், வரைவுகள், மற்றும் கோப்புகளைச் சமர்ப்பித்தல் போன்ற பல அலுவலகப் பணிகள் மின்னணு-அலுவலகம் (e-Office) என்ற திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**94.** பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியின் அருகாமையிலேயே அரசின் சேவைகளை எளிதில் பெற ஏதுவாக, பொதுச் சேவை மையங்களின் (CSC) எண்ணிக்கையை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சிறிய தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களை (Micro-ATM) பொதுச் சேவை மையங்களில் அமைத்திட நடவடிக்கைகள் எடுக்கப்படும். மின்-முத்திரைத் தாள் (e-Stamp) வழங்கும் பணியை மேலும் 30 பொதுச் சேவை மையங்களுக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் நிதி உதவியுடன், மத்திய அரசின் இணையதள வழிகாட்டுதல்படி, மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு துறைகளின் இணையதளங்கள் (Websites) மறுசீரமைக்கப்படும். தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT Park)

அமைப்பதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படும். இதன்மூலம் வேலைவாய்ப்பு வசதிகள் நம் ஆட்சிப்பரப்பில பெருகும்.

**தொழிலாளர் நலம்**

**95.** எனது அரசு, தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்கள் பாதுகாப்பாக பணிபுரியும் சூழலை உருவாக்குவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது. குறிப்பாக, அமைப்பு மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே அறிவித்தபடி, ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர் நலவாரியம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**96.** அட்டவணை இனத்தைச் சேர்ந்த 200 கிராமப்புறப் பெண்களுக்கு எட்டு வகையான தொழிற் பிரிவுகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்புகளை உருவாக்க, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் “வேலைவாய்ப்பு முகாம்கள்” (Job Fair) நடத்தப்படும். சங்கங்களின் சட்டதிட்டத்தின் (Society Act) கீழ் செயல்படும் புதுச்சேரி அமைப்புசாரா தொழிலாளர் நலச் சங்கம், சுயநிதி திரட்டும் வகையில், புதுச்சேரி அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியமாக மாற்றப்படும். மத்திய அரசு திட்டத்தின்கீழ் ₹ 5 கோடி செலவில்

மேட்டுப்பாளையத்தில் உள்ள அரசு ஆண்கள் தொழிற் பயிற்சி நிலையம் “மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக” மாற்றப்படும். தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு ஆண்டுக்கு ₹ 55 இலட்சம் செலவிடப்படும். கோரிமேடு E.S.I. வளாகத்தில் 50 படுக்கைகள் கொண்ட புதிய உயர்தர நவீன மருத்துவமனை E.S.I. கழக உதவியுடன் அமைப்பதற்காக இந்த ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவக்கப்படும்.

**உள்ளாட்சி**

**97.** பொலிவுறு நகரம் (Smart City) திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட விரைந்து முடிக்கக்கூடிய திட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன; (i) தானியங்கி தண்ணீர் வழங்கும் இயந்திரங்கள் (Water ATM) அமைத்தல், (ii) நடமாடும் கழிப்பிடங்கள் அமைத்தல் (Mobile Toilet), (iii) நவீன மின்னணுக் கழிப்பிடங்கள் அமைத்தல் (Modular e-Toilet), (iv) தரம் உயர்த்தப்பட்ட பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல், (v) மிதிவண்டிகள் பகிர்தல் (Bicycle sharing), (vi) நகரின் பெயரை முன்னிலைப்படுத்துவது (City Branding), (vii) தகவல் மேடைகள் அமைத்தல் (Information Kiosk), (viii) பணம் தருவதற்கான ஒருங்கிணைந்த அட்டை அறிமுகப்படுத்துதல் (Unified Payment Card), ஆகிய எட்டுத் திட்டங்களும் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**98.** தூய்மை இந்தியா திட்டத்தின் அங்கமான திடக்கழிவு மேலாண்மை மூலம் பல்வேறு திட்டங்கள் ₹ 2.90 கோடி மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வருகின்றன. இதுதவிர, மத்திய அரசிடம் இருந்து ₹ 17 கோடி நிதி உதவி பெற்றுத் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மேலும் பல திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் (NULM)கீழ், (i) நகர்ப்புறத் தெரு வணிகம் (Urban Vendors) செய்வோருக்கு உதவி அளித்தல் மற்றும் (ii) வீடில்லாதவர்களுக்கு குடில்கள் அமைத்தல் (Shelter for Urban Homeless) ஆகிய பணிகள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**99.** எனது அரசு, தெரு வணிகத்தை ஒழுங்குபடுத்தும் முகமாக, தெரு வணிகம் செய்வோருக்குச் சிறப்பு விற்பனை மண்டலம் அமைத்து தருதல், அவர்களுக்கு தொழிற் பயிற்சி அளித்தல், தொழில் செய்வதற்குக் கடன் வழங்குதல், காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்துதல் முதலிய சேவைகளை “நகர்ப்புற தெரு வணிகம் செய்வோருக்கு உதவி” வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்க உத்தேசித்துள்ளது. இதற்காக, இதுவரையில் 2,922 தெரு வணிகம் செய்பவர்கள் கணக்கெடுக்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**100.** “நகர்ப்புற வீடில்லாதவர்கு இருப்பிட வசதி” திட்டத்தின்கீழ், ₹ 1 கோடி செலவில் புதுச்சேரி மற்றும் ஏனாம் நகராட்சியில் வீடில்லாதவர்களுக்கு இரவு தங்குமிடங்கள் கட்டித்தரப்படும். மேலும்

உழவர்கரை, காரைக்கால் மற்றும் மாஹே நகராட்சியில் ₹ 1 கோடி செலவில் தற்போதுள்ள இரவு தங்குமிடங்கள் சீர்செய்து தரப்படும். சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஏற்கனவே அறிவித்தவாறு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ₹ 1 கோடியிலிருந்து ₹ 2 கோடியாக உயர்த்தப்பட்டு அதற்குத் தேவையான நிதி இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முழுமையாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**திட்டம் மற்றும் ஆராய்ச்சி**

**101.** திட்டம் மற்றும் ஆராய்ச்சித்துறையின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பிரிவைப் (Monitoring and Evaluation) பலப்படுத்தி, பயன் குறியீடுகள் சார்ந்த திட்டமிடல் முறையை (outcome budget) நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவானது, துறைவாரியாக ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆகும் செலவினங்கள் மற்றும் திட்டங்கள் மூலம் இடைக்காலத்தில் மற்றும் இறுதியில் பெறும் அளவிடக்கூடிய பயன்கள் (measurable quantities) ஆகியவற்றை முன்னரே கணக்கிட்டு அவை நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும். சோதனை அடிப்படையில், முதற்கட்டமாக சமூக நலத்துறையின் செயல்பாடுகள் இத்தகு முறையில் மதிப்பீடு செய்யப்படும்.

**102.** மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் மத்திய திட்டக்குழு (Planning Commission) கலைக்கப்பட்டு, அதற்கு மாற்றாக, ஒரு ஆலோசனை அமைப்பான நிதி ஆயோக் (*NITI AAYOG*) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், திட்டம் மற்றும் திட்டமல்லாத செலவினங்கள் (Plan and Non-Plan) என்ற நிதி ஒதுக்கீடு அளவீடுகள் மத்திய அரசால் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக மூலதன மற்றும் நடைமுறைச் செலவினங்கள் (Capital and Revenue) என்று 2017-18ஆம் நிதியாண்டு முதல் புதிய முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புதுச்சேரியில் தற்போதுள்ள மாநிலத் திட்டக்குழு (State Planning Board) தொடர்வது மற்றும் புதுச்சேரியில் ஆண்டுத் திட்ட அளவை அக்குழு பரிந்துரைப்பதன் தேவைகள் குறித்த கேள்விகள் எழுந்துள்ளன. இதை விரிவாக ஆய்வுசெய்து விரைவில் தகுந்த கொள்கை முடிவுகள் அரசால் எடுக்கப்படும். பல்வேறு மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சரின் ஆலோசனைக் குழுக்கள் போன்று நம் ஆட்சிப்பரப்பில் "முதலமைச்சரின் பொருளாதார மற்றும் நிர்வாக ஆலோசனைக் குழு" (Chief Minister's Economic and Administrative Advisory Council) ஒன்று அமைக்கப்படும். இந்த ஆலோசனைக் குழுவில் ஓய்வுபெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த அரசு அதிகாரிகள், துறை வல்லுனர்கள் உள்ளிட்டோர் இடம் பெறுவர்.

**காவல்**

**103.** புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பராமரிக்கும் பொருட்டு, சட்டம்-ஒழுங்கிற்கு எனது அரசு முன்னுரிமை அளித்து அதை சீராகப் பராமரித்து வருகிறது. புதுச்சேரி காவல் துறையினரால், அனைத்து குற்றங்களும் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டு, குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் நிறுத்தப்படுவது நீங்கள் அனைவரும் நன்கு அறிந்ததே. இதனால் புதுச்சேரி காவல் துறையின் பணி பலரும் போற்றும் பெருமை வாய்ந்ததாகத் திகழ்ந்துவருகிறது. தற்போதுள்ள அனைத்து வாக்கி-டாக்கிகளையும் டிஜிட்டல் முறையில் நவீனமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. காவல் துறையில் உள்ள பழைய இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை மாற்றி ₹ 2.11 கோடி செலவில் புதிய வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், காவல் துறையை மேம்படுத்த 44 உதவி ஆய்வாளர்கள், 390 காவலர்கள், 200 கடலோர ஊர்க்காவல் படையினர், 265 ஊர்க்காவல் படையினர்கள், 29 ஓட்டுநர்கள் உள்ளிட்ட இத்துறையில் பல்வேறு நிலைகளில் உள்ள காலிப்பணியிடங்களை விரைவில் நிரப்ப எனது அரசு முடிவெடுத்துள்ளது.

**துறைமுகம்**

**104.** எனது அரசு, புதுச்சேரி துறைமுகத்தை மேம்படுத்தி அதை வணிக ரீதியில் பயன்படுத்துவதன்மூலம் கணிசமான வருவாயை ஈட்டும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. மீன்பிடித் தொழில் தடையில்லாமல் நடப்பதற்கு, புதுச்சேரி துறைமுகத்தில் 1.23 கன மீட்டர் அளவுக்கு மணலைத் தூர்வாரும் பராமரிப்புப் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும். மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் “சாகர்மாலா” திட்டத்தின்கீழ், சுற்றுச்சூழல் குறித்த அடிப்படை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின் புதுச்சேரி துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணி தொடங்கப்படும். இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு ஏற்கனவே ₹ 18 கோடியை விடுவித்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொதுப்பணிகள்**

**105.** மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு, உள்கட்டமைப்பு மேம்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மேலும், இது மக்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. எனது அரசு, மாநிலத்தின் சொந்த நிதி மற்றும் நபார்டு (NABARD), உள்ளிட்ட மத்திய நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று (Negotiated Loan) உள்கட்டமைப்பு வசதிகளைப்

பெருக்குவதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. புதுச்சேரி தேசிய நெடுஞ்சாலை NH 45 Aஇல் அமைந்துள்ள மேம்பாலத்திற்கு ₹ 23.60 கோடி செலவில் அணுகு சாலைகள் அமைத்தல், காரைக்காலில் பிராவடையானாற்றின் குறுக்கே ₹ 9.91 கோடி செலவில் புதிய பாலம் கட்டுதல் மற்றும் புதுச்சேரி, காரைக்கால், மாஹே பகுதியில் பத்து புதிய சாலைத் திட்டங்கள் சுமார் ₹ 87.56 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**106.** மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவது எனது அரசின் முன்னுரிமைகளில் ஒன்றாகும். நம் ஆட்சிப்பரப்பு மக்களின் வருங்காலக் குடிநீர் தேவைகளைக் கருத்தில்கொண்டு கடல்நீரைக் குடிநீராக்கும் உரிய திட்டங்கள் நம் மாநிலத்தில் நிறைவேற்றப்படும்.

**107.** குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர்த் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதலை முன்னிட் ₹ 28.73 கோடி திட்ட மதிப்பீட்டில் அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, உழவர்கரை நகராட்சி, கொம்பாக்கம் கிராமம், வேல்ராம்பட்டில் உள்ள இஞ்சினியர்ஸ் காலனி மற்றும் உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் ஆகிய பகுதிகளில் 6 குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்த் திட்டங்களை மேற்கொள்ள எனது அரசு உத்தேசித்துள்ளது. மேலும், ₹ 49.46 கோடி செலவில் காரைக்கால் நகர மத்திய மண்டல

(Central Zone-Karaikal) குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் ₹ 5.40 கோடி செலவில் காரைக்கால் அரசலாற்றில் நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் லிட்டர் அளவில் ஆற்று நீரை குடிநீராகச் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் பணி ஆகிய இரண்டு புதிய திட்டங்கள் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**108.** ஏனாமில் உள்ள பிரெஞ்சு கால்வாய் மற்றும் அடவிபோலம் கால்வாயை நீரிறைப்பு வசதியுடன் இணைக்கும் பணி ₹ 24.90 கோடி மதிப்பீட்டில், நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது. புதிய அரசுக் கட்டடங்கள் கட்டுதல், தற்போது உள்ள கட்டடங்களைச் சீரமைத்தல் மற்றும் தரம் உயர்த்துதல், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் அதிகாரிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய பணிகள் ₹ 119.44 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**வருவாய்**

**109.** பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எங்கள் அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவருகிறது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட “மக்கள்குரல்” என்ற புதிய திட்டத்தின் மூலம் நெட்டப்பாக்கம் தொகுதியில் நானும், எனது அமைச்சர்களும், அதிகாரிகளும் மக்களை நாடிச்சென்று

அவர்களின் குறைகளைக் கேட்டு, அவற்றிற்கு தீர்வுகாண நடவடிக்கைகள் எடுத்தோம். அந்நிகழ்ச்சியின்போது துறைகள் வாரியான திட்டங்கள் குறித்த விளக்கப்படங்களுடன் கூடிய கண்காட்சியுடன், அரசுத் திட்டங்களின் நோக்கமும் பயன்களும் மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக அடுத்த "மக்கள்குரல்" நிகழ்ச்சி காரைக்கால் மாவட்டத்தில் நிரவி திருபட்டினம் தொகுதியில் நடத்தப்படும். பின்னர் புதுச்சேரியில் மீதம் உள்ள 28 தொகுதிகளுக்கும் ஆறு மாத காலத்திற்குள் எங்களது அமைச்சரவை, மக்களை தேடிச் சென்று அவர்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும். "மக்கள்குரல்" நிகழ்ச்சியின் மூலம் பொதுமக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு மிகப்பெரிய பாராட்டும், வரவேற்பும் கிடைத்துள்ளது. இது மக்கள் பணியாற்ற எங்களுக்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது என்றால் அது மிகையல்ல.

**110.** அரசின் சேவைகளைப் பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக பல்வேறு விதமான பிரமாணப் பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டிய நிர்வாக நடைமுறை முற்றிலும் நீக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் நகல்களில், பதிவு பெற்ற அரசு அதிகாரியின் ஒப்பம் பெறும் முறைக்குப் பதிலாக, விண்ணப்பதாரர்களே சுய ஒப்பம் (Self Attestation) இட்டு சமர்ப்பிக்கும் முறை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**111.** வருவாய்த் துறை, தற்பொழுது சாதிச் சான்றிதழ், குடியிருப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் ஆகிய பல்வேறு சான்றிதழ்களை இணையதளம் மூலம் வழங்கி வருகிறது. இணையதளம் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவாகப் பரிசீலிப்பதற்கு ஏதுவாக, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இந்த ஆண்டு மடிக்கணினிகள் வழங்கப்படும்.

**சட்டம்**

**112.** டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் இளங்கலை சட்டப் படிப்பு படித்து முடிக்கும் மாணவ, மாணவிகள் சட்டத் துறையில் (Law Department) ஒரு வருட காலத்துக்கு ₹ 9,000 மாதாந்திர உதவித் தொகையுடன் உள்ளிருப்புப் பயிற்சி (Internship) பெறும் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

**113.** ஆண்டு வருமானம் ₹ 2 இலட்சத்துக்கும் குறைவாக உள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த இளம் வழக்கறிஞர்களுக்கு 2 வருடங்கள் வரை வழங்கப்படும் ₹ 3,000 மாதாந்திர உதவித்தொகை ₹ 5,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**ஊரக வளர்ச்சி**

**114.** இந்திய அரசு கடலோரப் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதற்காக “தீனதயாள் உபாத்யாயா கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத்

திட்டத்தை” (DDU-GKY) நடைமுறைப்படுத்தி வருகிறது. “சாகர் மாலா” திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உருவாகும் சிறந்த வேலை வாய்ப்புகளை கடலோர சமுதாய மீனவ மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான திறன்களை அவர்கள் வளர்த்துக்கொள்ள, தீனதயாள் உபாத்யாயா திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பதன் மூலம் சாகர் மாலா திட்டத்தில் கடலோர சமுதாய மக்களின் பங்களிப்பு இருப்பதுடன், புதுச்சேரியின் பொருளாதார வளர்ச்சியிலும் அவர்கள் நன்கு பங்கேற்க இயலும். இதன்மூலம் கடலோரப் பகுதிகளின் சிறப்பான பொருளாதார வளர்ச்சியையும் நம்மால் உறுதி செய்ய முடியும். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக புதுச்சேரி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**115.** 80 விழுக்காட்டுக்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்கள் தங்களது வாழ்வாதாரத்திற்காக விவசாயத்தைச் சார்ந்து இருக்கிறார்கள். மத்திய அரசின் வேளாண் சார்ந்த மகளிர் திட்டம் (MKSP), விவசாயத் தொழிலில் ஈடுபடும் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், அவர்களுக்கு அதிகாரம் மற்றும் உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரித்திடவும் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம்

விவசாயத்தில் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பை ஊக்குவிக்க முடியும். மேலும், இது அவர்களுக்கு விவசாயம் சார்ந்த நிலைத்த வாழ்வாதாரத்தை (Sustainable Livelihood) உருவாக்க உதவும். 2,000 வேளாண் மகளிர் இத்திட்டத்தின்கீழ் 2019-20ஆம் ஆண்டில் பயன்பெறுமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

**நில அளவை மற்றும் பதிவேடுகள்**

**116.** நில ஆவணங்கள் பராமரித்தலில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டு, இலவச மனைப்பட்டா வழங்கும் விதிகளின்கீழ் வழங்கப்பட்ட பட்டாக்களை கணினி மயமாக்கி அனைவரும் முழு விவரங்களை அறிந்துகொள்ளும் வகையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். புதுச்சேரி யூனியன் பிரதேசம் முழுவதும் நவீன முறையில் நில அளவை மேற்கொள்ள, நில அளவைக் காலம் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும். "நிலப்பதிவேடுகளை கணினி மூலம் நவீனமயமாக்கல்" திட்டத்தின்கீழ், நில அளவைத் துறையில் உள்ள பழமை வாய்ந்த அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் முறையில் பராமரிக்கப்படும்.

**117.** தற்பொழுது நிலுவையில் உள்ள பட்டா மாற்றுதல் தொடர்பான பணிகளை விரைந்து முடிக்கும் வண்ணம் தகுதிவாய்ந்த நில அளவையர்களைத் தேவையான அளவில்

பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் நில அளவைப் பதிவேடுகள் துறை மூலம் வெளியிடப்பட்டு உரிமங்கள் வழங்கப்படும்.

## அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

**118.** எனது அரசு புதுச்சேரியில் ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக ₹ 122 கோடி மதிப்பீட்டில் பூர்வாங்கத் திட்ட அறிக்கையைத் (Preliminary Project Report) தயாரித்து மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்துக்குச் சமர்ப்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், கடற்கரை மேலாண்மை, மாசுக் கட்டுப்பாடு, கடலோர வளங்களைப் பாதுகாத்தல், வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் சுற்றுலா வளர்ச்சி போன்ற பல்வேறு திட்டங்களைப் புதுச்சேரியில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**119.** காரைக்காலில் உள்ள திருநள்ளாற்றில், ₹ 3.75 கோடி செலவில் ஏற்கனவே அறிவித்த கோளரங்கம் அமைக்கும் பணியை ஒருங்கிணைத்து விண்வெளி விளக்க மற்றும் கண்டுபிடிப்பு மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**120.** பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு தகவல்களை அறியும் பொருட்டு புதுச்சேரி உள்ளிட்ட அனைத்துப் பிராந்தியங்களிலும் பல்வேறு இடங்களில் LED திரைகள் நிறுவப்படும்.

**நகர மற்றும் கிராமத் திட்டமிடல்**

**121.** பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 3,000 வீடுகள் கட்டும் பணி இந்த வருடம் நிறைவடையும் நிலையில், மேலும் 2,000 வீடுகள் கட்டுவதற்கு உரிய திட்டம் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும். அம்ருத் (AMRUT) துணைத் திட்டத்தின்கீழ், காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் புவியியல் தகவல் அமைப்பின் அடிப்படையில் நகரப்பெருந்திட்டங்கள் (Master Plan) தயாரிக்கப்படும்.

**122.** பல்வேறு வீடுகட்டும் திட்டங்களின்கீழ் முன்னர் கட்டப்பட்டு தற்போது சிதலமடைந்த நிலையில் உள்ள வீடுகளை மறுசீரமைப்பு செய்யும் பொருட்டு பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இவ்வரசு நிதி உதவி பெற உத்தேசித்துள்ளது. இதன்மூலம் ஏறக்குறைய 750 பயனாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். மத்திய அரசு மானியமாக ₹ 1.5 இலட்சமும் மாநில அரசு மானியமாக ₹ 50 ஆயிரமும் பெற்று மீதம் தேவைப்படும் ₹ 2 இலட்சம் முதல் ₹ 3 இலட்சம் வரையிலான தொகையை வங்கிகள் மூலம் பயனாளிகள் கடனாகப்

பெற நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது தொடர்பான திட்டம் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஒப்புதலுக்காக அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

**சுற்றுலா**

**123.** இவ்வாட்சிப்பரப்பில், சுற்றுலாத்துறை மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருவது நம் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒன்றாகும். புதுச்சேரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், கணிசமான அளவில் 8 விழுக்காடு அதிகரித்துள்ளது. எனது அரசு, மத்திய அரசின் நிதி உதவியுடன் ₹ 181 கோடிக்கும் மேலாக பல்வேறு சுற்றுலாத் திட்டங்களை நம் ஆட்சிப்பரப்பில் செயல்படுத்தி வருகிறது. வம்பாகீரப்பாளையம், வீராம்பட்டினம் மற்றும் சின்ன வீராம்பட்டினம் கடற்கரைகளில் கடற்கரை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் பல நிறைவடைந்துள்ளன. மேலும், மணப்பட்டு மற்றும் நரம்பை கடற்கரைகளில் மேம்பாட்டுப் பணிகள் பல நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவடையும். காரைக்கால் பகுதியில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால், கடற்கரை விடுதி (Beach resort) ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் விதமாக, கடற்கரைக் குடில்களைக் கட்டி, டர்ன்-கீ அடிப்படையில் (Turn-key basis) நிர்வாக மேலாண்மை செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**124.** வார இறுதி நாட்களில் சுற்றுலா பயணிகள் விரும்பி வருகை தரும் சுற்றுலாத் தலமாக புதுச்சேரி தற்போது உள்ளது. வார இறுதி நாட்கள் மட்டுமின்றி புதுச்சேரிக்கு வாரம் முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் விதத்தில் தக்க சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி கடற்கரைப் பகுதியில், முன்பு சாராய வடி ஆலை இருந்த இடத்தில், கருத்தரங்கக் கூடத்துடன் கூடிய பண்பாட்டு வளாகம் ஒன்று அமைக்க ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், துறைமுக வளாகத்தில் உள்ள பழைய கிடங்குகளை, பெரு நிறுவனங்களின் கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் (MICE சுற்றுலா) நடத்த ஏதுவாகப் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவுறும். மேலும், MICE சுற்றுலாவிற்காகவும், புதுச்சேரி சுற்றுலாப் பயண அமைப்பாளர்களுக்கு சுற்றுலாப் பயிற்சி அளிக்கவும், சிறப்பு ஒதுக்கீடாக ₹ 1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**125.** முருங்கப்பாக்கத்தில் பாரம்பரிய சுற்றுலா கிராமம் (Heritage Tourism Village) ஒன்று உருவாக்கப்படும். சுற்றுப்புறச் சூழல் சுற்றுலா (Eco-Tourism) மேம்பாட்டின் ஒரு பகுதியாக, அலையாத்தி (Mangrove) மரங்களின் வழியே பயணித்து இயற்கைச் சுற்றுலா அனுபவம் பெற, முருங்கப்பாக்கம் கலைகள்

மற்றும் கைவினைக் கிராமத்திலிருந்து அரிக்கன்மேட்டிற்கு "பாண்டி நெக்லஸ்" (Pondy Necklace) என்னும் புதிய படகு சவாரி இந்த ஆண்டு தொடங்கப்படும். கடற்கரைச் சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா மற்றும் ஆன்மீகச் சுற்றுலா ஆகியவற்றின்கீழ் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நடப்பு ஆண்டில் முடிவடையும்.

**126.** சுற்றுலாத் துறையில் தனியார் முதலீட்டாளர்களுக்கு உரிய தளத்தை உருவாக்கும் நோக்கில், சுற்றுலாத் தொழிற் கொள்கை மற்றும் "உண்டு – உறைவிட" (Home Stays) நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படும். சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக செயலி (Mobile App) மற்றும் இணைய வழிச் சுற்றுலா தகவல் வசதி (Online Tourist Information System) ஆகியவை தேசிய தகவலியல் மையம் (NIC) மூலமாக உருவாக்கப்படும். பல்வேறு சுற்றுலாக் கருப்பொருட்களை (Theme Based Tours) மையமாகக் கொண்டு இ–பைக் சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, புதுச்சேரி கடற்கரைகள், நகரத்தின் பேஃஷன் கடைகள், உணவகங்கள் மற்றும் புதுச்சேரியின் பிற பிராந்தியங்களையும் உள்ளடக்கிய சுற்றுலா ஆகியவை தனியார் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கிராமப்புற மற்றும் விவசாயச் சுற்றுலாவை

ஊக்குவிக்கும் பொருட்டு, புதிய கிராமப்புற சுற்றுலாக் கொள்கை (Rural and Agri Tourism Policy) வெளியிடப்படும். சுற்றுலா வழிகாட்டிகளை உருவாக்கும் நோக்கில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான சிறப்புப் பயிற்சி இந்த ஆண்டு அளிக்கப்படும்.

**127.** காரைக்கால் பகுதியில் உள்ள திருநள்ளாற்றில் சுற்றுலா தங்கும் விடுதிகள் மற்றும் ஆன்மீகப் பூங்கா அமைக்கும் பணிகள் நடப்பு ஆண்டில் நிறைவடையும். சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி கோவில்பத்து அரசு சுற்றுலா விடுதி புனரமைக்கப்பட்டு கூடுதல் அறைகள் கட்டப்படும். காரைக்கால் கடற்கரைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஆவன செய்யப்படும். ஏனாம் சுற்றுலா கோபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொழுதுபோக்குப் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் நிறைவுற்று அதன் இரண்டாம் கட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஏனாம் பகுதியில் நீர் விளையாட்டுக்குத் தேவையான புதிய படகுகள் வாங்கப்படும்.

**128.** பல்வேறு சுற்றுலாத் திட்டங்களுக்காக ₹ 114.50 கோடி மதிப்பில் திட்ட முன்வரைவுகள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசு, சுற்றுலா அமைச்சகத்திடம் நிதி உதவி கோரி சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (i) புதுச்சேரியில் பகுதிவழிச் சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு மைய மேம்பாடு, (ii) புதுச்சேரியில் ஒலி–ஒளி காட்சி மையம், (iii) காரைக்கால் பகுதியில் அலையாத்திக் காடுகள், (iv) காரைக்காலில் திறந்த வெளி அரங்கம் மற்றும் பல்நோக்கு மையத்தை மேம்படுத்துதல், (v) காரைக்கால் பகுதியில்

உள்ள பெரிய மசூதியின் திருக்குளத்தை அழகுபடுத்துதல், (vi) மாஹே பகுதியில் உள்ள கடற்கரைப் பகுதியை மேம்படுத்துதல், (vii) மாஹே பகுதியின் கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் மசூதிகளை மேம்படுத்துதல், (viii) ஏனாம் பகுதியில் தாவரவியல் பூங்காவினை மேம்படுத்துதல், (ix) ஏனாம் பகுதியில் ஆற்றங்கரைப் பகுதியை மேம்படுத்துதல் ஆகிய ஒன்பது திட்டங்கள் இதில் அடங்கும்.

**போக்குவரத்து**

**129.** எனது அரசு, மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை நிதிஉதவியுடன் ஓட்டுனர் பயிற்சி நிலையம் (IDTR) ஒன்றை ₹ 17 கோடி செலவில் அமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக 10 ஏக்கர் நிலம் ஏற்கனவே கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், காரைக்காலில் வட்டார ஓட்டுநர் பயிற்சி நிலையம் அமைக்க அரசுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. வாகனங்களின் சாலைப்போக்குவரத்துத் தகுதியை (Road Worthiness) உறுதிப்படுத்த, வாகனங்களை ஆய்வு செய்து சான்றிதழ் அளிக்கும் மையம் ஒன்றைப் புதுச்சேரி பகுதியில் ₹ 15.75 கோடி மதிப்பீட்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ₹ 14.40 கோடி மத்திய அரசின் பங்களிப்பாகவும், மீதமுள்ள ₹ 1.35 கோடி மாநில அரசு பங்களிப்பாகவும் இருக்கும். மத்திய

அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையுடன் இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு புதிய வாகன நிறுத்துமிடங்கள் அமைத்தல், சாலைச் சந்திப்பு விரிவாக்கப் பணிகள் (Junction improvement) மேற்கொள்ளுதல், பேருந்து நிறுத்தங்களை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பல பணிகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்

**130.** எனது அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மற்றும் கல்வி மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு வருடமும், 16 விழுக்காடு அளவிற்குக் குறையாமல் ஆதிதிராவிடர் சிறப்புக்கூறுத் திட்ட நிதி (SCSP) ஒதுக்கப்படுகிறது. கடந்த 2018-19 நிதி ஆண்டில் இதற்காக ₹ 304 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நடப்பு நிதி ஆண்டில் (2019-20) இதன்கீழ் ₹ 326 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆதிதிராவிட இன மக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (R.O. Plant) அமைத்து அதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்க ₹ 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**131.** ஆதிதிராவிட இன மக்கள், குறிப்பாக கிராமப்புறங்களில் வசிப்போர் தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு புதுச்சேரியில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகத்தை அணுகுவதற்கு கிராமங்களில் இருந்து வருவது சிரமமாக உள்ளது. எனவே, என்னுடைய அரசு, புதுச்சேரியின் பல முக்கிய பகுதிகளை இணைக்கும் வில்லியனூரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கிளை அலுவலகம் ஒன்றை அமைக்க உத்தேசித்துள்ளது. ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் தற்போதுள்ள ஒரு லைன் கொண்ட மின்வசதி மாற்றப்பட்டு 3 லைன் கொண்டவைகளாக ஆக்கப்படும்.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்**

**132.** எனது அரசு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் மற்றும் அவர்களின் சமூகப் பொருளாதாரம் மற்றும் கல்வி மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்குவது மட்டுமின்றி அவர்களுக்கு உண்டு உறைவிட விடுதி (Hostel) வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், தேசிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (NBCFDC) மூலமாகக் கடன் பெற்று, புதுச்சேரி பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலக் குழுமம் (PBC&MDC) மூலமாக,

பயனாளிகளுக்குக் கல்விக் கடன், சிறு தொழில் கடன் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. ஏழ்மை நிலையிலுள்ள கைவினைக் கலைஞர்களுக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மையினர் நலக் குழுமத்திடம் இருந்து பெற்ற கடனைப் பயனாளிகள் திருப்பி செலுத்தாத காரணத்தினால், அந்தக் குழுமம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மேம்பாட்டுக் கழகத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, இவ்வாண்டு ₹ 5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**133.** பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சிவப்பு அட்டைதாரர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று இலவச வேட்டி, சேலை வழங்கப்படும்.

**134.** தற்போது புதுச்சேரி, காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதிகளில் இயங்கி வரும் மாணவர் விடுதிகளை (Hostel) தவிர, புதுச்சேரி பகுதியில் கோர்க்காடு கிராமத்தில் புதிதாக ஒரு உண்டு உறைவிடப் பள்ளி ₹ 12 கோடி செலவில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏம்பலத்தில் பெண்கள் தங்கும் விடுதி ஒன்றை இந்த ஆண்டில் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**135.** இவ்வாட்சிப்பரப்பில் உள்ள பல்வேறு சமூகத்தினரின் பொருளாதாரம், சமூக நிலை மற்றும் கல்வி தொடர்பான தகவல்களைத் துல்லியமாக அறிய சாதி வாரி மக்கள் தொகைக்

கணக்கெடுப்பு மிகவும் அவசியம் என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வர். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இது போன்ற ஒரு கணக்கெடுப்பு இதுவரை நடைபெறாத காரணத்தால் அரசின் திட்டங்கள் உரிய பயனாளிகளுக்குச் சென்று அடைவதை முழுமையாக உறுதி செய்துகொள்ள முடியாத நிலை இப்போது நமக்கு உள்ளது. எனவே, நமது நலத்திட்டங்கள் அனைத்தும் உரிய பயனாளிகளுக்கு முறையாக சென்றடைய, இவ்வாறான கணக்கெடுப்பு மிகவும் உதவிகரமாக இருக்கும். எனவே, எனது அரசு நடப்பு ஆண்டில் சாதி வாரிக் கணக்கெடுப்பினை நடத்த உத்தேசித்துள்ளது என்பதை இந்த அவைக்கு தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு ₹ 1 கோடி நிதி இந்த ஆண்டு ஒதுக்கப்படவுள்ளது.

**சமூக நலம்**

**136.** உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின். (குறள்-540)

அதாவது, நாம் அடைய வேண்டிய குறிக்கோள்களை இடைவிடாது நினைத்துக்கொண்டிருந்தால் எண்ணியது அனைத்தும் நாம் எண்ணியவாறு நிறைவேறும் என்பது திருவள்ளுவர் வாக்கு. இவ்வாட்சிப்பரப்பில், சமூக நலத் துறை மூலம் மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள், முதியோர் மற்றும் நலிவடைந்த பிரிவினருக்கு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**137.** அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 21,000 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். சமூக நலத்துறையின் மொத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சுமார் 70 விழுக்காடு மாற்றுத்திறனாளிகளுக்காக செலவிடப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர நிதிஉதவி அளிக்கும் திட்டத்தின்கீழ் வருடத்திற்கு ₹ 52 கோடி செலவாகிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதுபோலவே, நடைமுறையில் உள்ள முக்கிய நலத்திட்டங்களான திருமண உதவித்தொகை, கல்விக் கட்டணத்தை திரும்ப அளித்தல் (Reimbursement), எரிபொருள் மானியம், ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற திட்டங்கள் மூலம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் அதிகப் பயன்பெற்று வருகிறார்கள். மாற்றுத்திறனாளிகள் அரசுப் பேருந்தில் பயணம் செய்ய இலவசப் பயண அட்டை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**138.** மத்திய அரசின் சமூக நீதி அமைச்சகத்தின் மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டை (UDID) வழங்கும் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். புதுச்சேரி மாநிலத்தில் மொத்தம் எட்டு குடும்ப நல ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. திறமைமிக்க ஆலோசகர்களால் குடும்பப் பிரச்சனைகளில் இணக்கமான தீர்வு காணப்பட்டு பாதிக்கப்பட்ட

நபர்களுக்கு மறுவாழ்வு தொடர்பான சேவைகளும் இந்த மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் சுமார் 2,000 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

**139.** எனது அரசு, “குடிப்பழக்கம் விடுப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு” என்ற புதிய திட்டம் ஒன்றை இவ்வாண்டு முதல் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது. இதன்மூலம், குடி மற்றும் போதைப் பொருள் பழக்கங்களிலிருந்து பாதிப்புக்குள்ளானவர்களை மீட்டு மறுவாழ்வுச் சேவைகளை அளித்திடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சமுதாய மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும். போதைப்பொருள் பழக்கத்திலிருந்து சிறார்களை மீட்கும் விதமாக, புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்களில் உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் சிறப்பு சிகிச்சை மையங்கள் இந்த ஆண்டு துவக்கப்படும்.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு**

**140.** வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தற்காலிக உறைவிடம், காவல் துறை உதவி, சட்ட உதவி, மருத்துவ சிகிச்சை மற்றும் மனநல ஆலோசனை ஆகியவற்றை ஒரே இடத்தில் வழங்குவதற்காக 24 மணி நேரமும் தொடர்புகொள்ளும் வகையில் சிறப்பு தொலைபேசி எண்ணுடன் கூடிய மையங்கள்

(One Stop Crisis Centres) அமைக்க மகளிர் நிறுவனம் மற்றும் அதிகாரமளித்தல் (Womens Agency and Empowerment) பற்றிய 12வது திட்ட செயற்குழு, பரிந்துரை செய்துள்ளது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் அடிப்படையில் காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதியில் இந்த மையங்களை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இந்த ஆண்டு கட்டட வேலைகள் துவங்கப்படும். மாஹே பகுதியில் இந்த மையம் அரசு மருத்துவமனையில் இயங்கும்.

**141.** வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்கு உரிய அரசுத் துறைகளின் மூலம் உடனடி உதவி வழங்க 24 மணி நேரமும் செயல்படும் அவசர காலத் தொடர்பு எண், அதாவது “181 மகளிர் உதவி எண்” புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பெண்களின் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்த அனைத்து விவரங்களையும் இந்தத் தொடர்பு எண் மூலம் அறிந்துகொள்ளலாம். வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடியாக உதவிகள் மற்றும் ஆதரவினை ஒரே குடையின்கீழ் ஒருங்கிணைந்த முறையில் வழங்க இவ்வாட்சிப்பரப்பில் பெண்கள் உதவி மற்றும் சேவை (Helpline) வசதிகள் துவங்கப்படும்.

**142.** பல்வேறு நடப்பியல் சூழல்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தங்குமிடம், உணவு, உடை, மருத்துவ சிகிச்சை மற்றும் பாதுகாப்பு வழங்கும் “ஸ்வதார் கிரஹ்” (Swadhar Greh) என்ற மத்திய அரசுத் திட்டம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரியாங்குப்பம் சிறுவர் சீர்திருத்தப் பள்ளி வளாகத்திற்குள், இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு நிதி உதவியுடன் புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**143.** எனது அரசு, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை எவ்விதத் தடையும் இன்றி தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது முதியோர், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், திருமணமாகாத பெண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோரை உள்ளடக்கி மொத்தம் 1,44,847 பயனாளிகள், ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ₹ 330 கோடி செலவு செய்யப்படுகிறது. கூடுதலாக 10,000 புதிய தகுதிவாய்ந்த பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி’2019 முதல் சேர்க்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் அரசுக்கு ஆண்டிற்கு கூடுதலாக ₹ 21 கோடி செலவாகும்.

நிறைவுரை

**144.** ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர் (குறள்-620)

அதாவது, தளராத முயற்சியோடு உழைப்பவர்கள் ஊழையும் புறந்தள்ளி வெற்றி காண்பர் என்பது திருவள்ளுவர் கூற்று. இவ்வாட்சிப்பரப்பின் வருவாய்ச் செலவினங்கள் ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துகொண்டே வருவதால், மூலதனச் செலவினங்களுக்காகவும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காகவும் அதிக அளவில் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ள தேவை குறித்து நான் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய சூழ்நிலையிலும் முக்கிய உள்கட்டமைப்புத் தேவைகளான சாலை அமைத்தல், மின்சாரம், குடிநீர் வழங்குதல் போன்றவற்றிற்குத் தேவையான நிதி இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**145.** மேலும், பாப்ஸ்கோ, பாசிக், ஆங்கிலோ பிரெஞ்ச், சுதேசி பாரதி மில் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் பணிமூப்பு அடைந்தவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய சம்பளம் மற்றும் ஓய்வூதியப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டு நிதி ஆதாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் துறைகளில் காலியாக உள்ள

பணியிடங்களை பதவி உயர்வின் அடிப்படையிலும், நேரடி நியமன அடிப்படையிலும் உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அந்தப் பதவிகளுக்கான பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**146.** எனது அரசு, மக்களுக்கு சிறு வரிச்சுமையையும் ஏற்படுத்தாமல், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் சொந்த நிதி ஆதாரங்களை அதிகரித்தல் மற்றும் மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்படுவதைப் போல் நமது யூனியன் பிரதேசத்திற்கும் மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதி உதவி கோரிப் பெறுதல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும், நிர்வாக இன்னல்களுக்கு மத்தியில், தொய்வின்றித் தொடர்ந்து உறுதியுடன் மக்கள் நலன் காக்க மேற்கொள்ளும் என இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

**147.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை இவ்வாறாக இந்த மாண்புமிகு அவையின்முன் சமர்ப்பித்து மேலான உறுப்பினர்களின் ஆதரவை நான் நாடுகிறேன்.

**வாழ்க ! பாரதம் !**

**வெல்க ! புதுச்சேரி !**

**நன்றி ! வணக்கம் !**

150 YEARS OF CELEBRATING THE MAHATMA

வடிவமைப்பு மற்றும் அச்சிட்டோர் : **அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி - 605 009**